தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.10.2013**

**விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் இணையலாம்: வேளாண்மை இணை இயக்குநர் தகவல்**

விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம் என நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் என். நாகமணிபிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: குமரி மாவட்டத்தில் முக்கியப் பயிராக நெற்பயிர் கும்பப்பூ பருவத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களினாலும், பூச்சி மற்றும் நோயினாலும் மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

இந்த இழப்பை ஈடுசெய்யும் வகையில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் அரசால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் குத்தகைதாரர்கள் உள்பட நெல் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் சேர்ந்து பயன்பெறலாம்.

ஏக்கருக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய மொத்த காப்பீட்டு பிரிமியத் தொகை ரூ. 259-ல் அரசு மானியம் ரூ. 143 போக ஏக்கருக்கு ரூ. 116 மட்டும் விவசாயிகள் செலுத்த வேண்டும்.

மகசூல் இழப்பு ஏற்படும் பட்சத்தில் இழப்பீட்டுத் தொகையாக ஏக்கருக்கு ரூ. 12,944 பெறலாம். நெல் நேரடியாக விதைத்தபின் அல்லது நட்டபின் ஒரு மாதத்துக்குள் அல்லது டிச. 15-ஆம் தேதிக்குள் இவற்றுள் எது முந்தியோ அதற்கு பிரிமியம் செலுத்தப்பட வேண்டும்.

உத்தரவாத மகசூலை ஒப்பிடும்போது, நடப்புப் பருவத்தில் மகசூல் எவ்வளவு குறைந்து உள்ளதோ அந்த விகிதப்படி நஷ்டஈடு வழங்கப்படும். விவசாயிகள்

தங்கள் பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி காப்பீட்டுக்கு விண்ணப்பித்துப் பயன்பெறலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தல்**

பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட தமிழக விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டம், மாநில செயலர் ஆர். ராஜா சிதம்பரம் தலைமையில் பெரம்பலூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத் தலைவர் என்.பி. அன்பழகன், செயலர் வி. விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், விவசாயிகளின் போராட்டத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை, வையம்பாளையத்தில் உழவர் தலைவர் நாராயணசாமி நாயுடுவிற்கு நினைவுமண்டபம் அமைக்கப்படும் என்ற உறுதிமொழியை தமிழக முதல்வர் நிறைவேற்ற வேண்டும்.

தேசிய வேளாண் பயிர்க் காப்பீடு திட்டம், வானிலை பயிர்க் காப்பீடு திட்டத்தை தனிநபர் பயனடையும் வகையில் மத்திய அரசு மாற்றியமைக்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கி, தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர்க் கடன் பெறும் விவசாயிகளிடம், தவணைத் தொகை பிடித்தம் செய்வதை கைவிட வேண்டும்.

2004- 2005-ம் ஆண்டு முதல் 2008- 2009 வரை, கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் விலையை சர்க்கரை ஆலைகள் வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததை செயல்படுத்த வேண்டும்.

தீவன விலை உயர்வு, பாலின் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதை கருத்தில் கொண்டு பசும்பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ. 5, எருமை பால் விலையை லிட்டருக்கு ரூ. 7 உயர்த்தி கொள்முதல் செய்ய வேண்டும். வறட்சியால்

பாதிக்கப்பட்ட 31 மாவட்ட விவசாயிகளின் பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட பொருளாளர் ஏ. மணி, அரியலூர் மாவட்ட இளைஞரணி செயலர் கே. செல்லதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தருமபுரி மாவட்டத்தில் பரவலாக மழை**

தருமபுரி மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக வட கிழக்குப் பருவ மழை பரவலாக பெய்து வருகிறது.

இண்டூர், பென்னாகரம், பாலக்கோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் செவ்வாய்க்கிழமை லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகள் (மில்லி மீட்டரில்):

தருமபுரி 10, அரூர் 6.30, பாப்பிரெட்டிப்பட்டி 4.20, பாலக்கோடு 10.30, பென்னாகரம் 5, ஒகேனக்கல் 15.40, மாரண்டஹள்ளி 2. மாவட்டத்தின் சராசரி மழையளவு 7.60.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தம்**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது செவ்வாய்க்கிழமை காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, தமிழ்நாடு முழுவதும் கடந்த இரு நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மேலும், வடகிழக்குப் பருவமழையும் தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதனால், காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவது செவ்வாய்க்கிழமை காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டதால், மேட்டூர் அணை மின் நிலையத்தில் 50 மெகாவாட் மின் உற்பத்தியும், சுரங்க மின் நிலையத்தில் 200 மெகாவாட் மின் உற்பத்தியும், ஐந்து கதவணைகள் மூலம் கிடைக்கும் 150 மெகாவாட் மின் உற்பத்தியும் தடைபட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த மூன்று நாள்களாக கர்நாடக மாநிலத்தில், காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. செவ்வாய்க்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 17,106 கன அடியாக இருந்தது.

இதனால், அணையின் நீர்மட்டம் 82.42 அடியாக உயர்ந்தது. நீர் இருப்பு 44.41 டி.எம்.சி.யாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை 80.86 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், செவ்வாய்க்கிழமை 82.42 அடியாக உயர்ந்தது. கடந்த இரு நாள்களில் மட்டும் அணையின்

நீர்மட்டம் 1.56 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**இதுவரை 115 டி.எம்.சி. தண்ணீர் திறப்பு**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு இதுவரை 115 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து கடந்த ஆகஸ்ட் 2-ஆம் தேதி முதல் காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்பட்ட உபரிநீரின் வரத்து அதிகமாக இருந்ததால், ஆகஸ்ட் 4-ஆம் தேதி மேட்டூர் அணை அதன் முழுக் கொள்ளளவை எட்டியது.

தொடர்ந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வந்தது.

தற்போது காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால் செவ்வாய்க்கிழமை காலை பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டது.

இதுவரை, கடந்த 81 நாள்களில் மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக 115.41 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை நின்ற பிறகு, மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு மீண்டும் தண்ணீர் திறக்கப்படும் என்று கூறப்படுகிறது.

**மாவட்டத்தில் தொடர் மழை**

திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாவட்டம் முழுவதும் ஒரு வாரமாக தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக திருவண்ணாமலையில் ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் திடீர் திடீரென கன மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை மதியம் முதல் திருவண்ணாமலை, வேங்கிக்கால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கன மழை பெய்தது.

இதனால் சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்ததுடன், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளும், பொதுமக்களும் இந்த தொடர் மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதே நிலை நீடித்தால் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளின் நீர்மட்டம் வெகுவாக உயரும் என்றும் விவசாயிகள் நம்பிக்கைத் தெரிவித்துள்ளனர்.

**ஒருபோக சாகுபடிப் பகுதியில் நடவுப்பணிகள் தீவிரம்**

பெரியாறு-வைகை பாசன, மேலூர் வட்டார ஒருபோக சாகுபடிப் பகுதியில் நடவுப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

ஒருபோக சாகுபடிப்பகுதிக்கு செப்டம்பர் 25-இல் தண்ணீர் திறக்கப்பட்டது.

சாகுபடிப் பகுதிகளில் போதிய மழை இல்லாததால் பாசனக்குளங்கள் வறண்டு கிடக்கின்றன. கால்வாய் பாசனப் பகுதிகளில் தற்போது தீவிரமாக நடவு வேலைகள் நடைபெற்று வருகிறது. வேளாண். துறையினர் ஒருநாற்று வரிசை நடவினை, திருந்திய நெல்சாகுபடி முறையை வலியுறுத்திய போதிலும், பலர் பழைய நடவுமுறையையே மேற்கொண்டுள்ளனர்.

கடைமடைப் பகுதிகளுக்கு கால்வாய்களில் போதியநீர் சென்றடையவில்லை. வங்கக்கடலில் தற்போது உருவாகிவரும் புயல் கைகொடுக்குமா என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

இருபோக சாகுபடி பகுதியில் தற்போது நெல்பயிர் கதிர்விளைச்சல் பருவத்தில் உள்ளது. நவம்பர் இறுதிக்குள் அறுவடைக்குத் தயாராகிவிடும் என விவசாயிகள் தெரிவித்தனர். இந்த வட்டாரத்தில் பெரும்பாலான விவசாய நிலம் வீட்டடிமனைகளாகிவிட்டது. மேலும் கண்மாய்கள் தற்போது பெய்த மழைநீரால் நிரம்பியுயுள்ளன. இதனால் நடவு வேலைகள் தாமதமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

**மதுரை பகுதிகளில் பரவலாக பெய்த மழை**

மதுரை நகர் மற்றும் ஊரகப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மாலையில் பரவலாக மழை பெய்தது. மழை காரணமாக நகரில் விளக்குத்தூண் உள்ளிட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகள் விற்பனை சிறிதுநேரம் பாதிக்கப்பட்டது.

மதுரை நகரில் கடந்த சில நாள்களாக மழை பெய்துவருகிறது. திங்கள்கிழமை மதுரையில் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே பதிவாகும் அளவுக்கு மழை பெய்தது. மற்ற இடங்களில் தூரலாகவே மழை பெய்தது. அதன்படி பேரணை (மில்லிமீட்டரில்) 26, வாடிப்பட்டி அருகே உள்ள ஆண்டிப்பட்டி பங்களா 4, இடையபட்டி 5, விரகனூர் 13 என மழை அளவு பதிவாகியுள்ளது. சாத்தையாறு அணையின் நீர்மட்டம் 14.30 அடியாக உள்ளது.

இந்தநிலையில் செவ்வாய்க்கிழமை காலை மதுரை மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலையில் திடீரென மழை பெய்தது.

சிம்மக்கல், பேச்சியம்மன்படித்துறை, கனகவேல் காலனி பகுதிகளில் மழையால் சாலைகளில் தண்ணீர் ஓடியது. ஆனால், கோமதிபுரம் உள்ளிட்ட இடங்களில் லேசான தூறலுடன் மழை நின்றது.

ஊரகப்பகுதிகளில் விரகனூர் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்தது. மழை காரணமாக நகரில் விளக்குத்தூண் உள்ளிட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகள் விற்பனை சிறிதுநேரம் பாதிக்கப்பட்டது. பின்னர் இரவில் வியாபாரம் களைகட்டியது

**ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம்**

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏற்ற உப தொழிலாக வெள்ளாடு வளர்ந்து வருகிறது. ஆடுகளை கொட்டிலில் அடைத்து வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் பலவகையிலும் பயனடைகின்றனர்.

இது குறித்து தேனி உழவர் பயிற்சி மையத்தில் நவீனமுறையில் ஆடு வளர்ப்பு பற்றிய இலவச பயிற்சி அக்.24, 25 ஆகிய ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

இப் பயிற்சியில் ஆடு இனங்கள், ஆடுகளைத் தாக்கும் நோய்கள், கொட்டகை அமைப்பு, தீவனப் பராமரிப்பு, இனப்பெருக்கப் பராமரிப்பு மற்றும் நோய் தடுப்பு முறைகள் ஒலி, ஒளிக் கருவிகள் உதவியுடன் எளிய தமிழில் நடத்தப்படும்.

பயிற்சி நேரம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் தெலைபேசி எண் 04546-260047 என்ற எண்ணிலோ அல்லது நேரிலோ உழவர் பயிற்சி மையம்,37 ஸ்ரீராம்நகர், அல்லிநகரம்,தேனி-625 531 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தொடர் மழையால் நீர்நிலைகள் நிரம்புகின்றன**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழையினால் இப் பகுதிகளில் வறண்டு கிடந்த கண்மாய், குளங்கள், ஊருணிகள் நிரம்பி வருகின்றன. வைகையாற்றுக்குள் செயல்பட்டு வரும் குடிநீர் திட்ட கிணறுகளிலும் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

வடகிழக்கு பருவ மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி பகுதிகளில் கடந்த சில நாள்களாக தினமும் மாலை நேரங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் மிதமான வெயிலுடன் ஜில்லென காற்று வீசுவதால் மக்களுக்கு இதமாக உள்ளது. வறண்டு

கிடந்த மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி பகுதிகளில் உள்ள விவசாய பாசனக் கண்மாய்கள், குளங்கள், ஊருணிகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கால்நடைகள் மேய்ச்சலுக்கு இந்த மழை மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக கால்நடை வளர்போர் தெரிவிக்கின்றனர். மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் இந்த பகுதிகளுக்கான குடிநீர் திட்டங்கள், கிராம குடிநீர் திட்டங்கள், மதுரை, ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களுக்கான குடிநீர் திட்டங்கள் என 70 க்கும் மேற்பட்ட குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

கடும் வறட்சியால் இக்குடிநீர் திட்ட கிணறுகளில் நீராதாரம் குறைந்து திட்டங்கள் செயலிழந்தன. இதனால் குடிநீர் பிரச்னை ஏற்பட்டது.

சமீபத்தில் வைகையாற்றில் வந்த மழைத் தண்ணீராலும் இப் பகுதிகளில் பெய்யும் மழை தொடர்வதாலும் குடிநீர் திட்ட கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இந்த மழை தொடர்ந்து பெய்தால் இந்த குடிநீர் திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாக அலுவலர்கள் தெரிவித்தனர்.

மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி ஆகிய. இடங்களில் குடியிருப்பு பகுதிகள், ரோடுகள் என பல இடங்களில் மழைத் தண்ணீர் வெளியேற வழியில்லாமல் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்

**நேரடி நெல்விதைப்பு செய்ய அதிகாரி வேண்டுகோள்**

பருவநிலை மாற்றத்தினை கருத்தில் கொண்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் நேரடி நெல்விதைப்பு செய்யுமாறு ராமநாதபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.ராமசாமி பாண்டியன் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுனாள் கிராமத்தில் நேரடி நெல்விதைப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமில் கலந்து கொண்ட வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.ராமசாமி பாண்டியன் பேசியது: பருவநிலை மாற்றத்தின் சூழ்நிலையினை விவசாயிகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

ராமநாதபுரம் பெரிய கண்மாய் ஆயக்கட்டு பகுதியில் நேரடி நெல் விதைப்பு

செய்வதால் சாகுபடி செலவையும், தண்ணீரையும் மிச்சப்படுத்தலாம் என்றார்.

விழாவிற்கு முன்னிலை வகித்து பெரிய கண்மாய் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் ஆர்.பாலசுந்தர மூர்த்தி பேசுகையில், ராமநாதபுரம் பெரிய கண்மாய் மூலம் முதுனாள், தொருவளூர், கவரங்குளம், அச்சுந்தன்வயல், பாப்பாகுடி, களத்தாவூர், புத்தேந்தல் மற்றும் கூரியூர் கிராமங்களில் 4 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சென்ற ஆண்டு பருவமழை பொய்த்ததாலும் அச்சுந்தன் வயல் கிராமத்தில் நெல்லுக்குப் பதில் எள் மற்றும் பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்து நல்ல மகசூலும், வருமானமும் பெற்றனர்.

நடப்பு ஆண்டில் பருவமழை தாமதமானதால் புத்தேந்தல் கிராம விவசாயிகள் சுமார் 400 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு செய்துள்ளனர். அதே போல பிற கிராமங்களை சேர்ந்த விவசாயிகளும் நடப்பு ஆண்டில் நேரடி நெல் விதைப்பு முறையினை கடைப்பிடித்து நிலத்தை தரிசாக விடாமல் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

முகாமில் விவசாயிகள் மு.மலைச்சந்திரன், ப.கோபிநாதன், கே.விநாயகசண்முகவேல், கோ.மகாதேவன், நா.கருணாநிதி, சாத்தையா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நேரடி நெல் விதைப்பு முறைகள்,உரமிடல் மற்றும் சாகுபடி முறைகள் பற்றி ராமநாதபுரம் வேளாண்மை அலுவலர் ஆர்.ராஜலெட்சுமி விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

ஏற்பாடுகளை விதை உதவி அலுவலர் திருஞானமணி,வேளாண்மை உதவி அலுவலர் சுதமதி ஆகியோர் செய்திருந்தனர்.

## ரூ. 18 லட்சத்தில் இலவச கால்நடைகள் வழங்கும் விழா

உத்தரமேரூர் கிழக்கு ஒன்றியம், ஒரக்காட்டுபேட்டையில் இலவச கால்நடைகள் வழங்கும் விழா அண்மையில் நடந்தது.

ஒன்றிய குழுத் தலைவர் ஆர்.கமலக்கண்ணன், துணைத் தலைவர் அ.ரவிசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றியச் செயலர் கே.பிரகாஷ்பாபு தலைமை தாங்கினார். அரும்புலியூர் கால்நடைத் துறை மருத்துவர் வனிதா வரவேற்றார்.

கால்நடைத் துறை உதவி இயக்குநர் ராஜன் சி.ஆண்டனி கால்நடைகள் பராமரிப்பு பற்றி விளக்கினார்.

உத்தரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வாலாஜாபாத் பா.கணேசன், காஞ்சி மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) சம்பத்குமார் ஆகியோர் பயனாளிகளுக்கு ரூ.16 லட்சத்து 95 ஆயிரம் மதிப்பில் கறவை பசுமாடுகளையும், ரூ.1 லட்சத்து 61 ஆயிரத்து 850 மதிப்பில் வெள்ளாடுகளையும் வழங்கினர்.

இவ்விழாவில், உத்தரமேரூர் வட்டாட்சியர் சாவித்ரி, அதிமுக ஒன்றியப் பொருளர் வி.அண்ணாதுரை, மாவட்ட அம்மா பேரவைத் தலைவர் ஓ.வி.வரதன், தொகுதி செயலர் கே.ஆர்.தருமன், மாவட்ட குழு உறுப்பினர் சுமதி குணசீலன், திருவந்தவார் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புத்தாகரம் கால்நடை மருத்துவர் இ.சாந்தி நன்றி கூறினார்.

**வங்ககடலில் காற்றழுத்த தாழ்வு: தமிழகத்தில் இன்றும் மழை பெய்யும்**

வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியால், தமிழகத்தில் இன்றும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தெற்கு ஆந்திராவுக்கும் வட தமிழகத்திற்கும் இடையே நிலைப்பெற்றுள்ளது. இது வலுப்பெற்றிருந்தாலும், இன்று அரபிக் கடலை நோக்கி சென்றுவிடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனால், தமிழகத்தின் வட மாவட்டங்களில் கனமழையும், தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும் பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தம்**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது செவ்வாய்க்கிழமை காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, தமிழ்நாடு முழுவதும் கடந்த இரு நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மேலும், வடகிழக்குப் பருவமழையும் தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதனால், காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவது செவ்வாய்க்கிழமை காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டதால், மேட்டூர் அணை மின் நிலையத்தில் 50 மெகாவாட் மின் உற்பத்தியும், சுரங்க மின் நிலையத்தில் 200 மெகாவாட் மின் உற்பத்தியும், ஐந்து கதவணைகள் மூலம் கிடைக்கும் 150 மெகாவாட் மின் உற்பத்தியும் தடைபட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த மூன்று நாள்களாக கர்நாடக மாநிலத்தில், காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. செவ்வாய்க்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 17,106 கன அடியாக இருந்தது.

இதனால், அணையின் நீர்மட்டம் 82.42 அடியாக உயர்ந்தது. நீர் இருப்பு 44.41 டி.எம்.சி.யாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை 80.86 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், செவ்வாய்க்கிழமை 82.42 அடியாக உயர்ந்தது. கடந்த இரு நாள்களில் மட்டும் அணையின்

நீர்மட்டம் 1.56 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.10.2013**

## விவசாய மலர்

### பண்ணைக் கழிவுகளை பணமாக்க

சிப்பிக்காளான் பூசண வித்துக்களைக் கொண்டு, பண்ணைக் கழிவுகளை பயனுள்ள எருவாக மாற்ற முடியும். தேங்காய் மட்டையில் இருந்து கயிறு தயாரிக்கும் போது கிடைக்கும் நார்க்கழிவு, விரைவில் மட்காத பண்ணைக் கழிவாகும். இவற்றை அப்புறப்படுத்த முடியாமல், சாலை ஓரங்களில் கொட்டுவதால், சுற்றுப்புற சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. தேங்காய் நார்க்கழிவில், அதிகமான விகிதத்தில் அங்ககக் கரிமம் மற்றும் தழைச்சத்து இருப்பதால், இவற்றை நேரடி உரமாக பயன்படுத்த முடியாது.

நார்க்கழிவுகளை, சிப்பிக்காளான் பூசணத்தைக் கொண்டு மட்கச் செய்தால், அதிலுள்ள "லிக்னின்' எனும் கடினப்பொருள், 30 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைகிறது. கரிமம், தழைச்சத்து விகிதத்தை 24:1 என்ற அளவிற்கு குறைத்து, சிறந்த எருவாக்குகிறது.

தயாரிக்கும் முறை: ஒரு டன் தேங்காய் நார்க்கழிவு, ஐந்து கிலோ யூரியா, ஒன்றரை கிலோ காளான் விதைகள்(ஐந்து புட்டிகள்), ஐந்துக்கு மூன்று மீட்டர் அளவுள்ள நிழலான இடம் தேவை. நூறு கிலோ நார்க்கழிவை, நிழலான இடத்தில் சமமாக பரப்பவும். ஒருபுட்டி யில் உள்ள காளான் வித்துக்களை மேற்பரப் பில் சீராக தூவவும். மீண்டும் நூறு கிலோ நார்க்கழிவு, அதன் மேல் இன்னொரு புட்டி காளான் விதைகளைத் தூவவும். இதன் மேல், ஒரு கிலோ யூரியாவை சமமாகத் தூவவும். மீண்டும் இதே போல இரண் டடுக்கில் நார்க்கழிவு, காளான் விதை,

யூரியா பரப்பி, ஒரு மீட்டர் உயரம் வரை தொடர்ந்து செய்யவும். அவ்வப்போது அடுக்குகளின் மேல் தண்ணீர் தெளிக்கவும். ஒரு மாதம் கழித்து, நார்க்கழிவு மட்கி, கரும்பழுப்பு நிறத்தில் மாறும்.

<u>பயன்கள்:</u>

* மட்கச்செய்வதன் மூலம் சூழல் மாசைத் தடுக்கலாம்.

* மண் வளத்தையும், ஈரத்தன்மையையும் பாதுகாக்கிறது. பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்ட, பேரூட்டச் சத்துக்கள் கிடைக்கின்றன.

* களர் நிலம், வறட்சி மிகுந்த பகுதிகளுக்கும் சிறந்த உரமாகும்.

* மட்கிய நார்க்கழிவில் "டிரைக்கோடெர்மா' பூசண எதிர் உயிர்கொல்லிகளை வளர்ப்பதன் மூலம், மண் வழி பரவும் பூசண பயிர் நோய் காரணிகளைக் கட்டுப்படுத்தலாம்.

## கரும்பு குழி நடவுக்கு முழு மானியம்

திருந்திய கரும்பு சாகுபடி திட்டத்தில், சொட்டுநீர் பாசனம் மற்றும் குழி நடவு மூலம் கரும்பு நடவு செய்பவர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ. 25 ஆயிரம் மானியம் வழங்கப்படும் என உதவி வேளாண் இயக்குனர் லட்சுமணன் தெரிவித்தார்.
**மேலும் அவர் கூறியதாவது:** நவம்பரில் முதற்கட்ட நடவு பருவம் என்பதால், கரும்பு நடவு செய்ய விரும்பும் விவசாயிகள், கரும்பின் ஒரு பரு மூலம் நாற்றங்கால் அமைத்து, குழி நடவு செய்து, சொட்டு நீர் பாய்ச்சி விவசாயம் செய்ய வேண்டும். இவ்வாறு பயிர் செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் மானிய தொகையும், நீரில் கரையும் தேவையான உரங்களும் இலவசமாக வழங்கப்படும். மதுரை பாலமேடு, அலங்காநல்லூர் வேளாண் அலுவலகத்தில் மேலும் விபரங்களை அறியலாம், என்றார். உதவி அலுவலர் ஸ்ரீதர் உடனிருந்தார்.

## நவீன தொழில்நுட்பங்கள்

**தோட்டம் பராமரிப்பு:** இடைவெளி உள்ள இடங்களில் ஏல நாற்று நடவு செய்வதை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். போதிய நிழல் இல்லாத இடங்களில் நிழல் மரக்கன்றுகளை நடவேண்டும்.
மண் பரிசோதனைப்படி கடந்த மாதம் இரண்டாவது தவணை உரமிடாத

தோட்டங்களில் இம்மாதம் உரமிடலாம். நீர்ப்பாசன வசதியுள்ள தோட்டங்களில் பொதுவான பரிந்துரை எக்டருக்கு 61.5 கிலோ தழைச்சத்து, 41.5 கிலோ மணிச்சத்து மற்றும் 83 கிலோ சாம்பல்சத்து ஆகும். இச்சத்துக்களைக்கொடுக்க 90 கிலோ யூரியா, 200கிலோ முசோரிபால் மற்றும் 150 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் இடலாம்.

மானாவாரி தோட்டங்களில் கடந்த மாதம் கடைசி தவணையாக உரமிடாத தோட்டங்களில் இம்மாதம் உரமிடலாம். பொதுவான பரிந்துரையான எக்டருக்கு 37.5 கிலோ தழைச்சத்து, 37.5 கிலோ மணிச்சத்து மற்றும் 75 கிலோ சாம்பல்சத்து ஆகும். இச்சத்துக்களை கொடுக்க 81 கிலோ யூரியா, 187 கிலோ முசோரிபால், மற்றும் 125 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் இடலாம்.

இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் தோட்டங்களில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு செடிக்கு 5 கிலோ தொழு உரம் அல்லது 1-2 கிலோ வேப்பம் புண்ணாக்கு மற்றும் 100 கிராம் எலும்புத்தூள் போன்றவற்றை இடவேண்டும். மேலும் இரண்டாவது முறையாக 1-2 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடவேண்டும். நுண்ணூட்டச்சத்து குறைபாடு உள்ள தோட்டங்களில் குறிப்பாக துத்தநாகச்சத்து குறைபாடு உள்ள தோட்டங்களில் துத்தநாக சல்பேட்டை (ஜிங்க் சல்பேட்) 100 லிட்டர் தண்ணீருக்கு 250 கிராம் என்ற அளவில் கரைத்து வடிகட்டியபின் இலையில் மேல்புறம் மற்றும் கீழ்புறம் நனையுமாறு நன்கு தெளிக்க வேண்டும். போரான்சத்து குறைபாடு உள்ள தோட்டங்களில் எக்டருக்கு 375 கிராம் போராக்சை உரத்துடன் கலந்து இடவேண்டும்.

ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்: காய்ந்த இலைதழைகளை கவாத்து செய்து அதன்பின் 100 லிட்டர் தண்ணீரில் 150 மி.லி. பெந்தோயேட் என்ற அளவில் கலந்து மானாவாரி மற்றும் நீர்ப்பாசன வசதியுள்ள தோட்டங்களில் தெளிக்க வேண்டும். தண்டு துளைப்பான், அந்துப்பூச்சி வெளிவரும் சமயத்தில் பூச்சிமருந்து தெளிக்க வேண்டும். தோட்டங்களில் காணப்படும் வேர்ப்புழு வண்டுகளை பூச்சி வலை கொண்டு பிடித்து அழித்துவிட வேண்டும். மண் இடுவதற்கு முன் காய்ந்த இலைகளை அகற்றி மண்ணை நன்றாகக் கிளறிவிட வேண்டும். செடிக்கு 25 கிராம்

உயிரிகளான மெட்டாரைசிம் மற்றும் பேவேரியான் செடியின் தூர்ப்பகுதியில் கம்போஸ்டுடன் கலந்து இடவேண்டும். பூச்சிகளைத் தாக்கும் நூற்புழுக்களைக் கொண்ட கலேரியா இறந்த புழுக்களை (4 இறந்த புழுக்கள் ஒரு செடிக்கு) செடியின் தூர்ப்பகுதியில் 1.5 அங்குல ஆழத்தில் இடவேண்டும்.

**நோய் நிர்வாகம்:** தண்ணீர் தேங்கும் பகுதிகளில் போதுமான வடிகால் வசதி அமைத்து வடகிழக்கு பருவமழைக் காலத்தில் நோய் தோன்றுவதைத் தவிர்க்கலாம். கட்டே (நச்சுயிரி) நோய் தாக்குதல் உள்ள செடிகள் காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் அகற்றி அழித்துவிட வேண்டும். வட கிழக்கு பருவமழையின்போது பூசண நோய்கள் தாக்குவதற்கு வாய்ப்புள்ளது. எனவே அல்பினியா, குர்குமா மற்றும் அமோமம் போன்ற மாற்றுச்செடிகளை அகற்றிவிட வேண்டும். அழுகல் (பழ அழுகல்) மற்றும் கிழங்கு அழுகல் நோய் தாக்குதல் அதிகமாக உள்ள இடங்களில் ஒரு சத போர்டோ கலவை அல்லது 0.4 சதம் அகோமின் (பொட்டாசியம் பாஸ்போனேட்) (100 லிட்டர் தண்ணீரில் 400 மிலி) என்ற அளவில் இலைகளின் மீது தெளிப்பதுடன் 0.2 சதம் காப்பர் ஆக்சிகுளோரைடு (100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் என்ற அளவில் கலந்து) தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும்.

உயிரி கட்டுப்பாட்டு முறையில் டிரைக்கோடெர்மா ஹேசியானத்தை ஊட்டமேற்றிய இயற்கை உரங்களுடன் கலந்து தூர்ப்பகுதியில் இடவேண்டும். 2 சத சூடோமோனசை (100 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ என்ற அளவில் கலந்து) தெளிக்க வேண்டும்.

**மிளகு:-** தோட்ட பராமரிப்பு: மிளகு தண்டுப்பதியன்களை உற்பத்தி செய்வதற்கான ஓடு தண்டுகளை சேகரிப்பதற்காக நல்ல குணாதிசயங்கள் உள்ள மிளகு கொடிகளை அடையாளமிட்டு வைக்க வேண்டும். வளரும் கொடிகளைத் தாங்கு மரங்களுடன் சேர்த்து கட்டி ஏற்றிவிட வேண்டும். களை அதிகம் காணப்பட்டால் வீச்சுக்களை மேற்கொள்வதன் மூலம் கொடிகளின் இடையே வளரும் களைகளை கட்டுப்படுத்த முடியும். கொடியின் தூர்ப்பகுதியில் வேருக்கு தீங்கு ஏற்படாத வண்ணம் சுத்தமாகக் களை எடுத்து தூர்ப்பகுதியில் மூடாக்கு இடவேண்டும். முன்னமேயே இயற்கை உரம் இடாத தோட்டங்கள் இயற்கை உரத்தைக்

கொடியின் தூர்ப்பகுதியில் இடவேண்டும்.

**பூச்சி நிர்வாகம்:** அதிக நிழலுள்ள மிளகு தோட்டங்களில் பொல்லுவண்டு தாக்குதலுக்கு வாய்ப்பு உள்ளது. சரியான நிழல் சீரமைப்பை மேற்கொள்வதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும்.

**நோய் நிர்வாகம்:** அடி அழுகல் உள்ள தோட்டங்களில் ஒரு சத போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். அதிக தாக்குதல் உள்ள இடங்களில் ஒரு சத போர்டோ கலவையைத் தெளிப்பதுடன் 0.2சத காப்பர் ஆக்சி குளோரைடு (100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் என்ற அளவில் கலந்து) கொடிக்கு 5 லிட்டர் என்ற அளவில் தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும்.

சிற்றிலை வைரஸ் நோய் அல்லது பில்லோடி (தண்டின் கணு இடைப்பகுதி குறைதல்) தாக்குதல் உள்ள செடிகளை அகற்றி அழித்துவிட வேண்டும்.

## மாடுகளில் உண்ணிகளைத் தவிர்ப்பது எப்படி

கோடைக்காலங்களில் மாடுகளை அதிகமான அளவில் உண்ணிகள் தாக்கும். இந்த உண்ணிகள் பெரும்பாலும் மாடுகளில் அவற்றின் காதுகளின் உள்ளேயும் பால்மடிப்பகுதியில் வாலுக்கு அடியிலும், உடலின் மேற்புறத்திலும் இருக்கும்.

இதனாலே என்ன பிரச்னை என்று கேட்கிறீர்களா? உண்ணி இருந்தால் நாங்கள் கையில் பிடித்து நெருப்பில் போட்டுவிடுவோம் என்று சொல்கிறீர்கள். இங்க பாருங்க!

இந்த உண்ணிங்க ரத்தத்தை குடிக்க கடிப்பதால் கொசுக்கள் மனிதர்களை கடித்து மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சலை பரப்புவதுபோல உண்ணிகளும் மாடுகளில் நிணநீர் கட்டிநோய் (தெய்லீரியோசிஸ்), ரத்த சிறுநீர் நோய் (பேபிசியோசிஸ்) போன்ற நோய்களை பரப்பும். இந்த தெய்லீரியோசிஸ் நோய் பாதிக்கப்பட்ட மாடுகளில் அதிகமான காய்ச்சல், ரத்தசோகை, தீவனம் எடுக்காமை, கண், மூக்கில் இருந்து நீர் வடிதல், மூச்சு விட சிரமப்படும். மேலும் 20 லிட்டர் கறக்கும் மாடுகூட அரை லிட்டர் பாலுக்கு வந்துவிடும். பேபிசியோசிஸ் நோய் பாதிக்கப்பட்ட மாடுகள் அதிக காய்ச்சல், ரத்தசோகை, சிறுநீரானது ரத்தம் போல வரும். எனவே இந்த நோய்களிலிருந்து மாடுகளை காப்பாற்ற வேண்டுமென்றால் உண்ணிகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதாவது உண்ணிகள் ரத்தத்தில் ஓரணு ஒட்டுண்ணி நோய்களை பரப்புவதோடு

மட்டுமல்லாமல் உண்ணிகள் அதிகமாக இருந்தால் ஆடு, மாடுகள் தலையை ஆட்டிக் கொண்டும், சுவற்றில் தேய்த்துக்கொண்டும், தீவனம் உண்ணாமல் மெலிந்தும் காணப்படும். நீங்கள் சொன்ன மாதிரி உண்ணிகளை கையில் பிடித்து நெருப்பில் போடுவது, மாடு மேல் மண்ணெண்ணெய் தடவுவது போன்று செய்யாமல் பூடாக்ஸ் மருந்தை வாங்கி 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி மருந்து சேர்த்து கலந்து துணியில் நனைத்து மாடுகளின் எல்லா பாகத்திலும் தேய்க்க வேண்டும். குறிப்பாக மாடுகளின் காதுகளின் உட்புறம், மடிப்பகுதியில் நன்கு தேய்க்க வேண்டும்.

மேலும் இந்த மருந்து கலந்த தண்ணீரை கொட்டகையினுள் தரை, சுவற்றிலும் தெளிக்க வேண்டும். ஏனெனில் உண்ணிகள் ரத்தத்தை குடித்துவிட்டு தரையில் முட்டைகளை இட இருக்கும். ஒரு உண்ணி சுமார் 18,000 முட்டைகளை இடும். ஒரு உண்ணியை விட்டாலும் அதிலிருந்து 18,000 உண்ணிகள் பெருகி கால்நடைகளில் ஏறிக்கொள்ளும். எனவே உண்ணிகளை தடுக்க மாடுகளின்மேலும் கொட்டகையின் தரை மற்றும் சுவற்றிலும் உண்ணிநீக்க மருந்தை தெளிக்க வேண்டும். (தகவல்: முனைவர் .சௌந்தரராஜன், பேராசிரியர், கால்நடை ஒட்டுண்ணியியல் துறை, சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரி, சென்னை-600 007. போன்: 044-2530 4000. விரிவு: 2042. மின்னஞ்சல் soundarvet 1970@yahoo.com.

**முனைவர் தே.தியாகராஜன், பிஎச்.டி.,**

## கொடைக்கானல் மலைப்பகுதியில் தென்மேற்கு பருவமழை குறைந்தது :வடகிழக்கு பருவமழை மீது நம்பிக்கை

கொடைக்கானல் : கொடைக்கானலில் சென்ற தென்மேற்கு பருவமழை சராசரியை விட தொடர்ந்து குறைந்து வருகிறது.

கொடைக்கானலில் தென்மேற்கு பருவமழை காலத்தில், சென்ற ஆண்டு ஆகஸ்ட்ல் 230.8 மி.மீ., செப்டம்பரில் 169.5 மி.மீ., அக்டோபர் 19 வரை, 277 மி.மீ., என மொத்தம் 677.3 மி.மீ., மழை அப்சர்வேட்டரியில் பதிவாகியுள்ளது.

ஆனால், இந்தாண்டு தென்மேற்கு பருவமழை காலத்தில், ஆகஸ்ட் ல் 145.5 மி.மீ., செப்டம்பரில் 182.5 மி.மீ., அக்டோரில் 100.6 மி.மீ., என, மொத்தம் 428.6 மி.மீ., மழை மட்டுமே அப்சர்வேட்டரியில் பதிவாகியுள்ளது.

கொடைக்கானலைப் பொறுத்தவரை, தென்மேற்குப் பருவமழை ஆண்டு சராசரி 800 மி.மீ., ஆகும். ஆனால், 2012ல் 677 மி.மீ., 2013 ல் 428.6 மி.மீ., என குறைந்துகொண்டே வருவதால், கொடைக்கானலின் சீதோஷ்ணநிலை மாறி வருகிறது. குடிநீர்ப் பற்றாக்குறையும் நிலவுகிறது. மலைத்தோட்ட காய்கறிகள் விவசாயமும் பாதிப் பிற்குள்ளாகி வருகிறது. இதனால், பொதுமக்களும், விவசாயிகளும் கவலையடைந்துள்ளனர். வட கிழக்குப் பருவமழையாவது கைகொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மற்றும் மக்களிடம் உள்ளது.

### பூக்கள் விலையில் வீழ்ச்சி விவசாயிகள் கவலை

திண்டுக்கல் : பூ சந்தையில் கடந்த வாரம் கிலோ ரூ. 500 க்கு விற்பனை செய்யப்பட்ட சம்பங்கி பூக்கள் நேற்று கிலோ ரூ. 20 க்கு விற்கப்பட்டன. கோயில் நிகழ்ச்சிகள், வீட்டு விசேஷங்கள் காரணமாக கடந்த வாரம் பூக்களின் விலை உச்சத்தில் இருந்தது.

மல்லி கிலோ ரூ. 700க்கும், முல்லை ரூ. 600, ஜாதி, சம்பங்கி பூக்கள் ரூ. 500 க்கும் விற்கப்பட்டன. தற்போது விசேஷங்கள் எதுவும் இல்லை என்பதால் பூக்களின் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

திண்டுக்கல் பூ சந்தையில் நேற்றைய நிலவரப்படி மல்லி கிலோ ரூ. 300 க்கும், முல்லை ரூ. 250, ஜாதிப் பூ ரூ. 200, காக்கரட்டை ரூ. 150, சம்பங்கி ரூ. 20, செண்டு மல்லி ரூ. 20, அரளி ரூ. 20, செவ்வந்தி ரூ. 80 க்கு விற்கப்பட்டன. இந்த பூக்களையும் வாங்கிச் செல்ல வியாபாரிகள் வராததால், விவசாயிகள் விரக்தியடைந்தனர். தீபாவளிக்கு முன்னதாக பூக்களின் விலை உயர்வதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்ற நம்பிக்கை உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## மல்லிகை ஏற்றுமதி நிறுவனம் திண்டுக்கல்லில் துவக்க பரிந்துரை

திண்டுக்கல் : மல்லிகை ஏற்றுமதிக்கான உற்பத்தி நிறுவனத்தை திண்டுக்கல்லில் துவங்கலாமென தோட்டக்கலைத் துறையினர், அரசுற்கு பரிந்துரை செய்து உள்ளனர்.

திண்டுக்கல், திருச்சி, மதுரை, ராமநாதபுரத்தில் மல்லிகை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மார்ச்சிலிருந்து ஜூன் வரை மல்லிகை விளைச்சல் அதிகளவில் இருக்கும். அதிக வரத்து காரணமாக விவசாயிகள் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. இதற்கு அடுத்த கட்டமான அக்டோபரில் இருந்து ஜனவரி வரை மல்லிகை மகசூல் போதுமானதாக இருக்காது. வரத்து குறைவு என்பதால், அதிக விலைக்கு விற்கப்படும்.

விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத அளவிற்கு மல்லிகை சாகுபடியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாடு களில் மல்லிகைக்கான தேவை அதிக அளவில் உள்ளது. வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் வெளிநாடுகளுக்கு மல்லிகை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான உற்பத்தி நிறுவனங்களை துவக்குவதற்கான ஆய்வு சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதில், திண்டுக்கல்லில் உற்பத்தி நிறுவனத்தை துவக்கலாம், என தோட்டக்கலைத்துறையினர், அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

## தென்னையால் வளம் பெறும் தேனி விவசாயிகள்

தேனி மாவட்டத்தில், 18 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் தென்னை சாகுபடி நடக்கிறது. முல்லையாறு, வைகையாறு, மஞ்சளாறு, கொட்டகுடியாறு என நீர் வளம் இருப்பதால், தென்னை சாகுபடி நல்ல லாபம் கொடுப்பதாக உள்ளது. ஆற்று பாசனம் இல்லாத இடங்களில், இறவை பாசன சாகுபடி முறையில் வீரிய ஒட்டு ரக தென்னை சாகுபடி நடக்கிறது.

சொட்டுநீர் பம்ப் அமைக்க மானியம், டிராக்டர் வாங்க மானியம்,என விவசாயிகளுக்கு அரசு வழங்கும் சலுகைகளும் ஏராளம் கிடைக்கிறது.

*அனைத்து பொருட்களுக்கும் பணம்: உதிரும் மட்டை முதல் அனைத்திற்கும் விலை கிடைக்கிறது. நம் அன்றாட வாழ்வில் நீக்கமற நிறைந்திருக்கிறது.

தேங்காய் உரித்த பின் கிடைக்கும் மட்டை 75 பைசாவிற்கு வாங்கப்படுகிறது. பைபர் மில்களில் இவற்றை உடைத்து, கயறு தயாரிக்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் 22 கயறு மில்கள் உள்ளன. தேங்காய் சிரட்டை டன் 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. இவற்றை சுட்டு "கார்பன்' தயாரிப்பதால், சிரட்டைக்கு நல்ல "கிராக்கி' உள்ளது.

* தேனி டூ மும்பை, சபரிமலை: வீரிய ஒட்டு ரக குட்டை தென்னை(டி.என்.டி) மரங்கள் இளநீருக்காக மட்டும் வளர்க்கப்படுகின்றன. மூன்று ஆண்டுகளில் பலனளிக்கும் இவ்வகையை புதிதாக பயிரிடும் அனைத்து விவசாயிகளும் விரும்புகின்றனர். இவ்வகை இளநீருக்கு மும்பையில் நல்ல வரவேற்பு உள்ளது. மொத்த வியாபாரிகள், இவ்வகை இளநீர் காய்களை தோட்டத்தில் நேரடியாக கொள்முதல் செய்வதால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. சபரிமலைக்கு மண்டல பூஜை சீசனில், அய்யப்பனை தரிசிக்க வரும் பக்தர்களின் தாகம் தணிக்க, தேனி மாவட்டத்தில் இருந்து ஒரு கோடிக்கும் அதிகமான இளநீர் கொண்டு செல்லப்படுகிறது.

*ஏழாவது இடம்: தென்னை சாகுபடியில், தமிழக அளவில் 7வது இடம் தேனி மாவட்டத்திற்கு. கம்பம் பள்ளத்தாக்கு, போடி பகுதி, வைகையணை, வருஷநாடு பகுதியில் ஏராளமாக தென்னை பயிரிடப்பட்டுள்ளதால், சிறிய மாவட்டமான தேனி தென்னை சாகுபடியில் 7வது இடம் பெற காரணமாக உள்ளது.

*ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு: தென்னை விவசாயம், வியாபாரம், மரம் ஏறுபவர், கூலி தொழிலாளர்கள், மட்டை உரிப்பவர்கள், காய் சுமப்பவர்கள் என 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஈடு பட்டுள்ளனர். பலத்த மழை நேரம் தவிர்த்து அனைத்து நாட்களிலும் வேலை கிடைப்பதால், தொழிலாளர்கள் சிரமம் இன்றி வாழ்கின்றனர்.

* வரத்து குறைவால் எகிறிய விலை: தென்னை விவசாயத்திற்கு கடந்த சில ஆண்டுகள் சோதனை காலம். நிலத்தடி நீர் மட்டம் சரிந்துள்ளதால், தென்னையை காப்பாற்றுவதே விவசாயிகளுக்கு பெரும் சவாலாக மாறி விட்டது. நீர்

பற்றாக்குறையால், வாடிய தென்னை மரங்களை, மர அறுவை மில்களுக்கு சொற்ப விலைக்கு விற்றனர்.

உற்பத்தி சரிந்துள்ளதால், தேங்காய்க்கு நல்ல விலை கிடைக்கிறது. ஆயிரம் காய், பத்தாயிரம் ரூபாய்க்கு தோட்டத்தில் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது. சில்லரையில் ஒரு காய் 15 ரூபாய்க்கு மேல் விற்பனையாகிறது.

சிரட்டை விலை

டன் ரூ.9000

*சு.கணேசன், தேங்காய் மொத்த வியாபாரி: தேனி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும், தேங்காய்க்கு வட மாநிலங்களில் நல்ல கிராக்கி உள்ளது. மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களுக்கு தேனி மாவட்டத்தில் இருந்து தேங்காய் அனுப்பப்படுகிறது. விலையேற்றம் காரணமாக விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நல்ல லாபம் கிடைக்கிறது.

இங்கு உற்பத்தியாகும் தேங்காயில் 50 சதவீதம், காங்கேயம் எண்ணெய் மில்களுக்கு கொப்பரை காயாக அனுப்பப்படுகிறது. கயறு மில்காரர்கள், உரித்த மட்டையை 75 பைசா வரை வாங்குகின்றனர். கார்பன் தயாரிக்க தேங்காய் சிரட்டை பயன் படுவதால், டன் 9 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொள்முதல் செய்யப்படுகிறது.

லாபகரமானது

*ந.குமார், விவசாயி: இறவை பாசன நிலங்களில் நிலத்தடி நீர் மட்டம் சரிந்துள்ளதால், தென்னை விவசாயம் பாதிக்கப்படுகிறது. காய்கறி, தானிய பயிர்கள் போன்று அதிக எண்ணிக்கையில் கூலி தொழிலாளர்கள் தேவையில்லை. மரம் ஏறுவதற்கான கூலி அதிகமாக உள்ளதால், சிறு விவசாயிகளுக்கு பாதிப்பு. சில இடங்களில் ஊடு பயிர்களாக கோ கோ, சேப்பங்கிழங்கு சாகுபடி நடப்பதால் தென்னை விவசாயம் லாபகரமாக உள்ளது. நாள்தோறும் வேலை

*ஈ.பாண்டியம்மாள், கூலி தொழிலாளி: தென்னை விவசாயம் ஆண்டு முழுவதும் பலனளிப்பதால், நாள்தோறும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. உழைப்பிற்கேற்ப

ஊதியம் கிடைப்பதால், நிம்மதியாக வாழ்க்கை நகர்கிறது. காய்களை சுமப்பது, தரம் பிரிப்பது போன்ற பணிகள் கிடைப்பதால், பெண்களின் வாழ்க்கை தரமும் உயர்கிறது.

நல்ல சம்பளம் *ப.மாரிமுத்து, தேங்காய் உரிக்கும் தொழிலாளி:

ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட, கூலி தொழிலாளர்களின் வாழ்க்கை ஆதாரமாக, தென்னை சாகுபடி உள்ளது.

ஒரு காய் உரிக்க இவ்வளவு என கூலி பெறுவதால், அலுவலக பணி போன்று குறிப்பிட்ட நேரம் மட்டும் வேலை பார்த்தால் போதும். குறைந்த நேர பணி என்றாலும், கடுமையாக வேலை பார்க்க வேண்டும். நல்ல சம்பளம் கிடைப்பதால், சிரமம் பார்க்காமல் வேலை பார்க்கிறோம்.

தென்னை சாகுபடியானது, விவசாயிகளுக்கு மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நல்ல லாபம் கிடைப்பதாக உள்ளது.

## தென்னை சாகுபடியை அதிகரிக்க திட்டம்

கம்பம் : தென்னை சாகுபடியை அதிகரிக்க, தென்னை வளர்ச்சி வாரியம் பல்வேறு மானிய
திட்டங்களை அறிமுகம்செய்யவும், கருத்தரங்குகளை நடத்தவும் முடிவு செய்துள்ளது.

ஒரு காலத்தில் தென்னையை விரும்பி சாகுபடிசெய்த விவசாயிகள், சில ஆண்டுகளாக தென்னையை தாக்கும் நோய்களால் சாகுபடியை தவிர்த்து வருகின்றனர்.

கேரளா, தஞ்சை வாடல் நோய் உள்ளிட்ட பல நோய்கள் தாக்கு
கின்றன. கேரள வாடல் நோய்
தாக்கினால், அந்த மரத்தை வெட்டி அகற்ற வேண்டும்.

இல்லையென்றால், அந்த தோப்பில் உள்ள மரங்கள் அனைத்திலும் பரவும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். படிப்படியாக காய்க்கும் திறன் குறையும். கேரள வாடல் நோய் பாதித்த மரங்களை வெட்டுபவர்களுக்கு, மரத்திற்கு 250 ரூபாய் மானியம் சில ஆண்டுகளுக்கு முன் வழங்கப் பட்டது. இப்போது அது நடை

முறையில் இல்லை. இருந்த போதும், இப்போதும் தென்னை மரங்களை வெட்டி அழித்து வருகின்றனர். புதிதாக தென்னை சாகுபடிக்கு ஒருவரும் முன்வருவதில்லை. இந்நிலையில் தென்மாநிலங்களில் குறிப்பாக தமிழகம் மற்றும் கேரளாவில் தென்னை சாகுபடி குறித்த "சர்வே' நடத்தப்பட்டு மத்திய விவசாய அமைச்சகத்திடம் வழங்கப்பட்டுள்ளது. அந்த சர்வே அடிப்படையில், கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு, மத்திய விவசாய அமைச்சகம் சில பரிந்துரைகளை செய்துள்ளது.

அதன்படி, தென்னை சாகு படியை அதிகரிக்க உயர்ரக ஒட்டு கன்றுகள் இலவசமாக அல்லது குறைந்த விலையில் வழங்கவும், காய்ப்பு திறன் வரும் வரை, பராமரிப்பிற்கென உதவி தொகை வழங்குவது. உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பரிந்துரை செய்வது, தேங்காய்களை கொள்முதல் செய்வது உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்பட உள்ளது. தென்னை சாகுபடி குறித்த கூட்டங்களை கிராமப் பகுதி களில் நடத்தி, தென்னையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு விளக்கவும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

### ஏல விவசாயிகளுக்கு நெருக்கடி கேரள அரசின் திட்டம் என்ன

கம்பம் : தமிழக ஏல விவசாயிகளுக்கு, இடுக்கி மாவட்டத்தில் நெருக்கடி கொடுக்க கேரள அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக, தகவல்கள் வெளியாகியுள்ளது. இதனால் ஏல விவ சாயிகள் புலம்பி வருகின்றனர்.

இந்தியாவில் ஏலக்காய் சாகு படியில் முதல் இடத்தை கேரள மாநிலம் பிடித்துள்ளது. நாட்டின் மொத்த சாகுபடியில், 80 சதவீதம் ஏலக்காய் இடுக்கி மாவட்டத்தில் உள்ள 1.5 லட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்படுகிறது. ஏலத் தோட்டங்களில் 70 சதவீதம் தோட்டங்கள் தேனி மாவட்டத்தை சேர்ந்தவர்களிடம் உள்ளது. ஏலத்தோட்டங்களில் சாகுபடி செய்யப்படும் ஏலக்காய், இங்கு உள்ள ஸ்பைசஸ் வாரிய ஏல மையத்தில் விற்பனை செய்கின்றனர். இந்த விற்பனையில் கலந்து கொண்டு கொள்முதல் செய்வதும், தமிழக வியாபாரிகளேயாகும். போடி, தேவாரம், விருதுநகர்,

கம்பம் பகுதிகளை சேர்ந்தவர்களே வியாபாரம் செய்கின்றனர்.

கடந்த ஆண்டு முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக எழுந்த பிரச்னையில் கேரளாவிற்கு எதிரான போக்கு தேனி மாவட்டத்தில் எதிரொலித்தது. அப்போதிருந்தே, இடுக்கி மாவட்டத்தில், தமிழர் களுக்கு எதிரான போக்கு நிலவு கிறது. அங்குள்ள அரசியல்வாதிகள் அதை பெரிதாக்கி வருகின்றனர். இங்குள்ள தோட்டங்களில் சாகுபடி செய்வதும் தமிழர்கள், காய் கொள்முதல் செய்வதும் தமிழர்கள், தொழிலாளர்களும் தமிழர்கள் என்பதால், ஒருவித வெறுப்பு ஏற்பட்டுள்ளது. கம்பம் பகுதியில் இருந்து ஏலத்தோட்டங்களுக்கு தினந்தோறும் ஆயிரம் ஜீப்புகளில் தினமும் தொழிலாளர்கள் வேலைக்கு சென்று வருகின்றனர். கடந்த வாரம் திடீரென நெடுங்கண்டம் பகுதியில் வட்டார போக்குவரத்து அதிகாரிகள், ஜீப்புகளை, டூரிஸ்ட் பெர்மிட் வாங்க வேண்டும், என்று வலியுறுத்தி நடவடிக்கை எடுத்தனர். இதனால் ஜீப் வைத்திருப்பவர்கள், கேரளாவிற்கு செல்லாமல் இருந்தனர். ஏலவிவசாயிகள்
அவர்களை சமாதானம் செய்து அனுப்பி வைத்துள்ளனர்.
இருந்தாலும், ஒரு மாதத்திற்குள் டூரிஸ்ட் பெர்மிட் எடுக்க
வேண்டும் என்றும்,தவறும் பட்சத்தில், ஜீப்புகளை அனுமதிக்க முடியாது என்றும் கூறியுள்ளனர். ஆனால் டூரிஸ்ட் பெர்மிட்
எடுத்தால், ஜீப்புகளை இயக்க முடியாது என்றும் ஜீப் உரிமையாளர்கள் கூறுகின்றனர். வரி மிக அதிகமாக இருக்கும் என்றும், அது தங்களுக்கு நஷ்டத்தை ஏற் படுத்தும் என்றும் கூறுகின்றனர்.
கடந்த பல ஆண்டுகளாக இல்லாமல், இப்போது திடீரென கேரள அதிகாரிகள், டூரிஸ்ட் பெர்மிட் எடுக்க சொல்ல காரணம் என்ன, என்று கேள்வி எழுப்பு கின்றனர். தமிழக ஏல விவசாயி களுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும், என்பதுதான் கேரள அதிகாரிகளின் திட்டம் என்று ஏல விவசாயிகள் தரப்பில் கூறப் படுகிறது. தமிழக அரசு இந்த விஷயத்தில் கேரள அரசுடன் பேசி, ஏல விவசாயிகள் பாதிக்காதவாறு நட வடிக்கை எடுக்க வேண்டும்.

### ஸ்ரீவி.,யில் விவசாய பணிகள் துவக்கம்

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் பெய்து வரும் மழையை நம்பி, விவசாயிகள் விவசாய பணிகளை துவக்கி உள்ளனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, சரிவர மழை பெய்யவில்லை. இதனால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது.

கண்மாய்களில் தண்ணீர் இல்லாமல், விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் திண்டாடி வந்தனர். இந்நிலையில், கடந்த இரு நாட்களாக, பரவலாக மழை பெய்து வருகிறது.

இதை நம்பி, மானவாரி பகுதிகளில் மக்காச் சோளம் நடுவதற்காக, விவசாயிகள் உழவு பணிகளை துவக்கி உள்ளனர். சிலர் கிணறுகளில் உள்ள தண்ணீரை நம்பி, நெல் நடவு பணியிலும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

விவசாயி கிருஷ்ணன்,"" கடந்தாண்டு மழையை நம்பி, இரு முறை மக்கா சோளம் விதைத்தும், தொடர் மழை பெய்யாததால், கடும் நஷ்டம் ஏற்பட்டது.  தற்போது மழை பெய்து வருவதால், உழவு பணியை துவக்கி உள்ளேன். இந்தாண்டாவது மழை கை கொடுக்கும் என, எதிர்பார்க்கிறேன்," என்றார்.

### கார் சாகுபடி அறுவடைநேரடிகொள்முதலுக்கு விவசாயிகள் விருப்பம்

பத்தமடை:பத்தமடை பகுதியில் தற்போது தீவிர கார் சாகுபடி அறுவடை நடக்கிறது.இப்பகுதியில் விவசாயத்தை நம்பி மட்டும் ஏராளமானவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு தற்போது கார்பருவ சாகுபடி நெல் அறுவடை துவங்கிய நிலையில் ஒரு கோட்டை நெல் இரண்டாயிரத்து இருநூறாக இருந்தது. பாசன நிலங்களில் உள்ள வயல்களில் தொடர்ந்து நெல் அறுவடை நடப்பதால் இடைதரகர்கள் இதன் விலையை படிப்படியாக குறைத்து வருவது வாடிக்கையாக இப்பகுதியில் தொடர்ந்து வருகிறது. இடைத்தரகர்கள் வைத்ததுதான் விலை என்ற நிலை உருவாகி உள்ளது. உரம் விலை உயர்வு, விவசாய பணிக்கான கூலி உயர்வு என பல்வேறு சிரமங்களை தாண்டி பலன் கிடைக்கும் நேரத்தில், அரிசி ஆலை அதிபர்களுடன் சேர்ந்து இடைதரகர்கள் விவசாயிகளுக்கு நியாயமான விலை

கிடைக்க விடாமல் தடுத்து விடுவதாக விவசாயிகள் கூறி வருகின்றனர். இதனால் இங்கு அரசு நேரடி கொள்முதல் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் விரும்புகின்றனர்.

## எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு அதிகரிப்பு :உற்பத்தி உயர வாய்ப்பு...

நாட்டின் பல மாநிலங்களில், பருவமழை நல்ல அளவில் இருந்ததால், நடப்பு கரீப் பருவத்தில், அக்டோபர் 17ம் தேதி வரையிலுமாக, எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு, 195 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில், 178 லட்சம் ஹெக்டேராக இருந்தது.சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ள நிலையில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியும் உயரும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

**சோயா வித்துக்கள்:**இதையடுத்து, நடப்பு கரீப் பருவத்தில், நாட்டின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, 169 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப் பட்டுள்ளது. கடந்த ஆண்டின் இதே பருவத்தில், இவற்றின் உற்பத்தி, 152 லட்சம் டன்னாக இருந்தது.மேலும், நடப்பு கரீப் பருவத்தில், ஒரு ஹெக்டேரில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, 867 கிலோவாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்தாண்டின் இதே பருவத்தில், ஹெக்டேருக்கு, 855 கிலோவாக இருந்தது என, மத்திய எண்ணெய் மற்றும் வர்த்தக அமைப்பு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், சோயா எண்ணெய் வித்துக்கள் பரப்பளவு அதிகரித்துள்ளது. என்றாலும், செப்டம்பர் மற்றும் அக்டோபர் துவக்கத்தில், அதிகளவில் சோயா உற்பத்தி ஆகும் மாநிலங்களில், மழை பொழிவு குறைந்ததைஅடுத்து, இவ்வாண்டு, இதன் உற்பத்தி, 107 லட்சம் டன்னாக குறையும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது. அதேசமயம், கடந்தாண்டு இதன் உற்பத்தி, 113.40 லட்சம் டன்னாக இருந்தது. தவிட்டு எண்ணெய்:பருத்தி விதை உற்பத்தி, நடப்பாண்டில், 111.60 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்தாண்டில் இதன்

உற்பத்தி, 102.30 லட்சம் டன்னாக இருந்தது.பருத்தி எண்ணெய் உற்பத்தி, அதிக ஏற்ற, இறக்கமின்றி, 12.20 லட்சம் டன்னாக (11.30 லட்சம் டன்) இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தவிட்டு எண்ணெய் உற்பத்தி, நடப்பாண்டில், 9.30 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த 2012 – 13ம் பருவத்தில், 9 லட்சம் டன்னாக இருந்தது.உள்நாட்டில், பாமாயில் உற்பத்தி, 1.10 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

**பருத்தி உற்பத்தி:**இந்நிலையில், நடப்பு அக்டோபர் மாதம் முதல் துவங்கியுள்ள, 2013 – 14ம் பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.81 கோடி பொதிகளாக(ஒரு பொதி – 170 கிலோ) அதிகரிக்கும் என, இந்திய பருத்தி கழகத்தின் மூன்றாவது மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.சென்ற செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த, 2012 – 13ம் பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.57 கோடிபொதிகளாக இருக்கும் என, இக்கழகம் மதிப்பிட்டுள்ளது.

குஜராத், மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய நாட்டின் மத்திய பகுதியில், பருத்தி உற்பத்தி, 2.08 கோடி பொதிகளாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

இது, கடந்த பருவத்தில், 1.74 கோடி பொதிகளாக இருக்கும் என, பருத்தி கழகம் தெரிவித்து உள்ளது.இதற்கிடையே, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழகம் ஆகிய மாநிலங்களில், கடந்தாண்டு பருவமழை குறைவு மற்றும் வறட்சியால், சென்ற செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.51 கோடி டன்னாக குறைந்துள்ளதாக, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) தெரிவித்துள்ளது.இது, கடந்த பருவத்தில், மேற்கொள்ளப் பட்ட சர்க்கரை உற்பத்தியை விட (2.63 கோடி டன்), 4.5 சதவீதம் குறைவாகும்.

**மதிப்பீடு:**சென்ற செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த பருவத்தில், அரவைக்கு வந்தகரும்பின் அளவு, முந்தைய பருவத்தை விட, 2.5 சதவீதம் குறைந்து போனது.

மேலும், கணக்கீட்டு பருவத்தில், கரும்பு பிழிதிறன், 10.25 சதவீதத்திலிருந்து, 10.03 சதவீதமாக குறைந்து போனது.

இந்நிலையில், நடப்பு அக்டோபர் மாதத்துடன் துவங்கியுள்ள, 2013 – 14ம் பருவத்தில், கரும்பு அதிகளவில் உற்பத்தியாகும் பல மாநிலங்களில், பருவமழை பொழிவு நன்கு உள்ளதால், சர்க்கரை உற்பத்தி, 2.50 கோடி டன்னை தாண்டும் என, பல ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.

– பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

## நிரம்பிய குளங்களால் விவசாயிகள் மகிழ்ச்சி : நடப்பாண்டு விவசாயம் சிறக்க வாய்ப்பு

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் பெய்யும் தொடர்மழையால், பெரும்பாலான குளம் நிரம்பி வழிவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் முக்கிய தொழிலாக விவசாயம் உள்ளது. பவானிசாகர் அணை மூலம் கீழ்பவானி, அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, காலிங்கராயன் தடப்பள்ளி பாசன பகுதிகள், குண்டேரிப்பள்ளம், வரட்டுபள்ளம், ஒரத்துபாளையம் ஆகிய அணைகள் மற்றும் குளங்கள், குட்டைகள், சிறு அணைக்கட்டு மூலம் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஆண்டு முழுவதும் விவசாயம் செய்யப்படுகிறது. சென்ற சில ஆண்டுகளாக விவசாயி கூலி ஆள் பற்றாக்குறை, வறட்சி, ரியல் எஸ்டேட் ஆகியவற்றால், ஈரோடு மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களின் சாகுபடி பரப்பளவு படிப்படியாக குறைந்து வருகிறது.ஈரோடு மாவட்டத்தில் பெரும்பள்ளம், சஞ்சீவிராயன் ஏரி, ஓடத்துறை ஏரி, தண்ணீர்பந்தல் ஏரி, குண்டேரிப்பள்ளம் அணை, அனந்தசாகர் ஏரி, வரட்டுபள்ளம் அணை உள்ளிட்டவை உள்ளன. அணையின் நீர் இருப்பை பொறுத்து, பாசன வசதிகளும், நிலத்தடி நீர்மட்டமும் உள்ளது.கடந்த இரண்டு ஆண்டாக பருவமழையின்றி, அணைகள் வறண்டு விட்டது. கோபி சுற்று வட்டாரத்தில் சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குருமந்தூர், நம்பியூர் உள்ளிட்ட பகுதிகளில்,

கிணற்று நீரை நம்பியே விவசாயம் செய்யப்படுகிறது.
குறிப்பாக பருவ காலங்களில் பெய்யும் மழை நீரை ஆதாரமாக கொண்டே, மானாவாரி நிலங்கள் உள்ளது. நடப்பாண்டு துவக்கத்தில் சரியான மழை இல்லை. இரவில் பெய்யும் பனி மற்றும் கடந்த மாதத்தில் லேசாக பெய்த மழையை பயன்படுத்தி, மானாவாரி நிலங்களில் கோடை உழவு செய்து, நிலக்கடலை விதைப்பு செய்தனர்.
பருவமழை பெய்ததால், மழை இல்லாமல் மானாவாரியில் பயிரிட்டுள்ள நிலக்கடலை செடிகள் வாட துவங்கியது.இந்நிலையில், கடந்த சில வாரங்களாக, கோபி சுற்று வட்டாரத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. இம்மழையால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு கடந்த, 17 தேதியில் இருந்து தண்ணீர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. கவுந்தபாடி ஆனந்தசாகர் ஏரி, அதன் முழு கொள்ளளவை எட்டி, உபரி நீர் வெளியேறுகிறது. கோபி சுற்று வட்டாரத்தில் உள்ள குளங்கள் நிரம்பி வழிவதால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.தவிர, பெரும்பாலான குளங்கள் நிரம்பியதால், இந்தாண்டு சாகுபடி பருவம் முடியும் வரை, தண்ணீர் பிரச்னையால் விவசாயம் பாதிக்கப்படாது என்ற நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. இதனால், பெரும்பாலான விவசாய நிலங்களில், விவசாயப்பணிகளில், விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.ஆள் பற்றாக்குறைக்கு பதிலாக இயந்திரங்கள் மூலம் நடவு, களை எடுத்தல் பணிகளையும் மேற்கொள்கின்றனர். கடந்த மூன்றாண்டுகளுக்குப்பின், கோபி பகுதி மீண்டும் முழுமையாக பசுமையாக மாறிவருகிறது.

## விவசாயம் செழிக்க வடகிழக்கு பருவமழை தொடரணும் : மாநகரில் கொட்டி தீர்த்த மழையால் மகிழ்ச்சி

திருச்சி: வடகிழக்கு பருவமழை திருச்சி மாநகர பகுதியில் கொட்டி தீர்த்தது, வெயிலால் வாடிவந்த பொதுமக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த மழை தொடர்ந்தால், புதிதாக நடவுப்பணிகள்

மேற்கொள்ள வசதியாக இருக்கும் என்று, விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.வடகிழக்கு பருவமழை விரைவில் துவங்கும் என்று வானிலை ஆய்வு மையம் சமீபத்தில் அறிவிப்பு வெளியிட்டிருந்தது. அதன்படி கடந்த, மூன்று நாட்களாக, திருச்சி மாவட்டத்தின் பல இடங்களில் பரவலாக மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு, திருச்சி மாநகர பகுதிகளில் பலத்த மழை பெய்தது. தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்ட நிலையில், வடகிழக்கு பருவமழை குறிப்பிட்ட காலகட்டத்தில் துவங்கியுள்ளதால், திருச்சி மாவட்ட விவசாயிகள் சிறிது மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கடந்த, மூன்று நாட்களாக திருச்சி மாவட்டத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழை, திருச்சி புறநகர் மாவட்டத்தை விட, மாநகர் மாவட்டத்தில் தான் அதிகளவு பெய்துள்ளது. அதிலும் குறிப்பாக நேற்று முன்தினம் இரவு, 10 மணிக்கு துவங்கிய மழை, இரண்டு மணி நேரம் கொட்டித்தீர்த்தது.
திருச்சி மாநகரில் அதிகபட்சமான விமானநிலையம் பகுதியில், 47.4 மில்லிமீட்டரும், ஜங்ஷனில், 34 மில்லிமீட்டரும் மழையளவு பதிவாகியுள்ளது. இந்த மழையால், கடந்த சில மாதங்களாக கோடைக்காலம் போன்று அடித்த வெயிலால் பாதிக்கப்பட்ட மாநகர பொதுமக்கள், நேற்று முன்தினம் இரவு இதமான சூழலை அனுபவித்து மகிழ்ந்தனர்.நேற்று முன்தினம் காலை, நேற்று காலை வரை திருச்சி மாவட்டத்தில் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்):
லால்குடி, 7.1 மில்லிமீட்டர், முசிறி, 4.3, புள்ளம்பாடி, 5.4, துறையூர், 2, திருச்சி விமான நிலையம், 47.4, திருச்சி டவுன், 23.4, மருங்காபுரி, 7.4, பொன்னணியார் அணைக்கட்டு, 19.8, நாவலூர் குட்டப்பட்டு, 14, வாத்தலை அணைக்கட்டு, 19.9, சமயபுரம், 7, தேவிமங்கலம், 13.2, சிறுகுடி, 5, புலிவலம், 4, பொன்மலை, 24.6, ஜங்ஷன், 34, மேலணை, 19 மில்லிமீட்டர் என மழை பெய்துள்ளது.
திருச்சி மாநகர பகுதி மக்களை மகிழ்வித்த மழை, புறநகர் பகுதிகளில் குறைவாக பெய்ததால், விவசாயிகளை ஏமாற்றம் அடைய செய்துள்ளது. ஆயினும் இந்த மழை, சம்பா நடவுப்பணிகளை முடிக்க ஏதுவாக அமையும் என்று விவசாயிகள்

தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த மழையால் புதிதாக விவசாய நடவு பணியை துவக்க முடியாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து இ.கம்யூ., கட்சி திருச்சி மாவட்ட விவசாயிகள் பிரிவு மாவட்ட செயலாளர் சிவசூரியன் கூறியதாவது:தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்டநிலையில், வடகிழக்கு பருவமழை குறித்த நேரத்தில் துவங்கியுள்ளது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆனால் இந்த மழையை வைத்து புதிய நடவுப்பணிகளை மேற்கொள்ள முடியாது. முன்பு பெய்தது போல் தொடர்ந்து மழை பெய்தால், மாவட்டத்தில் புதிய நடவுப்பணிகள் துவங்கும். ஆயினும் இந்த மழையால், ஏற்கனவே துவங்கியுள்ள சம்பா நடவுப்பணிகளை முடிக்க ஏதுவாக இருக்கும்.பருவமழை பொய்த்து விட்டதால், ஆற்றுப்பாசனம் இல்லாத பகுதிகளான மணப்பாறை, மருங்காபுரி, தா.பேட்டை, துறையூர், உப்பிலியபுரம் உள்ளிட்ட மாவட்டத்தில் பல பகுதிகளில் விவசாயமே நடக்கவில்லை. வடகிழக்கு பருவமழை கை கொடுத்தால் மட்டுமே, மேற்கண்ட பகுதிகளில் விவசாயம் நடக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

### கரூரில் பெய்தது மழைவிவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: வடகிழக்கு பருவமழை கரூர் மாவட்டத்தில் பெய்ய துவங்கியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஒரே நாளில் கரூர் மாவட்டத்தில் 130 மி.மீ., மழை பெய்துள்ளது.கரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. நடப்பாண்டு ஜூன் மாத துவக்கத்தில் பெய்ய வேண்டிய தென் மேற்கு பருவமழையும் விவசாயிகளை ஏமாற்றியது. ஆனால், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியான கர்நாடகாவிலும், அமராவதி நீர்ப்பிடிப்பு பகுதியான கேரளா வி லும் மழை பெய்ததால், மேட்டூர், அமராவதி அணை க்கு அதிகளவில் தண்ணீர் வந்தது. இதையடுத்து, மேட்டூர் அணை, அமராவதி அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், கரூர் மாவட்டத்தை சேர்ந்த காவிரி மற்றும் அமராவதி ஆற்றுநீர் பாசன பகுதிகளில் சாகுபடி பணிகள் ஓரளவுக்கு துவங்கியுள்ளது.ஆனால், நடப்பாண்டும் கரூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பெய்யா ததால், மானாவாரி நிலங்களை சேர்ந்த விவசாயிகள் பெரும்

கவலையில் இருந்தனர். மேலும், கரூர் மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக கோடையை மிஞ்சும் அளவுக்கு வெயில் சுட்டெரித்தது. இந்நிலையில், வங்ககடலில் எழுந்துள்ள குறைந்தழுத்தல தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.கரூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணி முதல் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக பாலவிடுதியில் 33.3 மீ. மீ., மழை பெய்தது. நேற்று காலை 8 மணி வரை கரூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு விபரம் வரு மாறு (மி.மீ) க.பரமத்தி 5, குளித்தலை 3.20, மாயனூர் 11, கரூர் 29.60, அணைப்பாளையம் 6.20, பஞ்சப்பட்டி 6, கடவூர் 12.20, கிருஷ்ணராயபுரம் 9.60, மைலம்பட்டி 13.90 ஆகிய அளவுகளில் மழை பதிவாகியுள்ளது. கரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கி யுள்ளதால், மானாவாரி நிலங்களில் எண்ணை வித்துக்கள் சாகுபடி செய்யப்படும் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## பெரம்பலூர் மாவட்டவிவசாயிகள் குறைதீர்கூட்டம்; நாளை துவக்கம்

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடக்கிறது' என, மாவட்ட கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு மாவட்ட கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் நடக்கிறது. விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாய பணிகள் தொடர்பான பாசன ஏரி, வாய்க்கால்கள் தூர்வாருதல், வங்கி கடனுதவி, உரம், வேளாண்மை இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும்.எனவே, இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்து பயன்பெறலாம். கூட்டத்தில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர். எனவே

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வேர்கடலை வாங்கி செல்லும் வியாபாரிகள்

செஞ்சி:செஞ்சி பகுதியில் விளையும் வேர் கடலையை கர்நாடக பகுதி சுற்றுலா இடங் களில் விற்பனை செய்ய வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.செஞ்சி பகுதியில் தற்போது வேர்கடலை எடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. சில நாட்களாக வெயில் இல்லாமல் மேக மூட்டமும், சில நேரம் திடீரென தூரலும் உள்ளது. எனவே அறுவடை செய்த வேர்கடலை பயிர்களை வெயிலில் காய வைக்க முடியாமல் வீட்டின் உள்ளேயே காற்றோட்டமாக கொட்டி பாதுகாத்து வருகின்றனர்.

இது போன்ற விவசாயிகளுக்கு உற்சாகம் தரும் வகையில் திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம் மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் சிலர் உரிக்காத பச்சை வேர்கடலையை விலை கொடுத்து வாங்கி வருகின்றனர்.பெங்களூரு, மைசூர் பகுதியில் உள்ள சுற்றுலா பகுதிகள், பூங்காக்களில் விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் விற்பனை செய்ய பச்சை வேர்கடலைகளை மொத்தமாக வாங்கி வேன்களில் எடுத்து செல்கின்
றனர். வேர்கடலை அறுவடை நடக்கும் இடத்திற்கே சென்று தரமான வேர்கடலைகளை தேர்வு செய்து ஒரு மூட்டை பச்சை வேர்கடலையை 1,500 முதல் 1,600 ரூபாய் வரை கொடுத்து வாங்கி செல்கின்றனர்.

இது போன்று பச்சை வேர்கடலைகளை விற்பனை செய்யும் விவசாயிகள் வெயில் இல்லை என்ற கவலையும், காயவைத்து உடைத்து விற்பனைக்காக மார்க்கெட் கமிட்டிக்கு எடுத்து செல்லும் வேலையுமின்றி நிம்மதியடைந்துள்ளனர்.

### சம்பா சாகுபடி பணியில் விவசாயிகள் தீவிரம்

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் சம்பா சாகுபடி பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

சங்கராபுரம் பகுதியில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் ஏரி, குளங்கள் வறண்டன. கிணறுகளில் நீர் மட்டம் குறைந்தது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக கடந்த ஆண்டு விவசாயிகள் சாகுபடி செய்யவில்லை.

கடந்த மாதம் பெய்த கன மழையால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்தது. மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் நாற்றுவிட்டனர். சில நாட்களாக சங்கராபுரம் பகுதியில் பெய்த கன மழையால் சில ஏரிகள் நிரம்பின. கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்தது.
மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் வயலை உழுது சம்பா பருவ பொன்னி நெல் நாற்று நடவு செய்யும் பணியை தொடங்கி உள்ளனர்.
சங்கராபுரம் பகுதியில் தியாகராஜபுரம், எஸ்வி.பாளையம், ஊராங்காணி, தேவபாண்டலம், ஆலத்தூர், அரியபெருமானூர், நெடுமானூர், பொய்குனம், செம்பராம்பட்டு, கடுவனூர், புதூர், பாக்கம், குளத்தூர் உட்பட பல கிராமங்களில் 1500 ஏக்கர் பரப்பில் விவசாயிகள் சம்பா சாகுபடி பணியை தொடங்கி உள்ளனர்.
மானிய விலை சங்கராபுரம் பகுதியில் பரவலாக மழை பெய்துள்ளதால் விவசாயிகளுக்கு விதைநெல், உரம், பூச்சி மருந்து ஆகியவை மானிய விலையில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்பட்டுவருகிறது. விவசாயிகள் வாங்கி பயனடையுமாறு வேளாண்மை அலுவலர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

## தீபாவளியால் உளுந்தம் பருப்பு விலை கிடு கிடுஒரே வாரத்தில் குவிண்டாலுக்கு ரூ.600 உயர்வு

சேலம்: தீபாவளி பண்டிகைக்கு இன்னும் குறைந்த நாட்களே உள்ள நிலையில், வியாபாரிகள் தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்து செயல்படுவதால், உளுந்தம் பருப்பின் விலை, ஒரே வாரத்தில் குவின்டாலுக்கு, 600 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.தமிழகத்துக்கு தேவையான உளுந்து, உளுந்தம் பருப்பு, மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா, குஜாரத் ஆகிய மாநிலங்களில் இருந்தும், பர்மாவில் இருந்து கப்பல் மூலம் சென்னை கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து, தமிழகத்தின் பிற நகரங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
கடந்த ஆண்டு, தமிழகத்தில் எதிர்பார்த்த அளவு மழை இல்லாததால், வெளி மாநிலம், வெளி நாடுகளிலிருந்து, உளுந்தம் பருப்பை எதிர்பார்க்க வேண்டிய நிலைக்கு வியாபாரிகள் தள்ளப்பட்டனர். கடந்த மாதம் வரை, வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு வாரம், 25 லோடு வரை, உளுந்தம் பருப்பு விற்பனைக்கு

வந்து கொண்டு இருந்தது.

தீபாவளி பண்டிகைக்கு இன்னும், பத்து நாட்களே உள்ள நிலையில், அவற்றின் வரத்தில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. தற்போது வாரத்துக்கு, ஏழு லாரிகளில் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. அது மட்டுமின்றி பர்மா ரக உளுந்தம் பருப்பை விற்பனைக்கு கொண்டு வரும் வியாபாரிகள், விலை உயர்வை எதிர்பார்த்து, அவற்றை குடோன்களில் பதுக்கி வைத்துள்ளனர்.மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும், உளுந்தம் பருப்பின் வரத்தில் சரிவு ஏற்பட்டதை அடுத்து, கடந்த வாரம் குவின்டாலுக்கு, 400 ரூபாய் வரை, விலை உயர்ந்தது. நேற்று மேலும், 200 ரூபாய் விலை உயர்த்தப்பட்டுள்ளது.அக்டோபர் முதல் வாரத்தில், முதல்ரக உளுந்தம் பருப்பு மொத்த விலையில், குவின்டால், 6,600 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் குவின்டால், 6,100 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம் குவின்டால், 5,800 ரூபாய்க்கும் விற்றது.இந்த விலை, 400 ரூபாய் அதிகரித்து, முதல்ரகம் குவின்டால், 7,000 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் குவின்டால், 6,400 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம் குவின்டால், 6,100 ரூபாய்க்கும் விற்பனையானது.நேற்று குவின்டாலுக்கு மேலும், 200 ரூபாய் அதிகரித்து, முதல்ரகம், 7,200 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 6,600 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம், 6,300 ரூபாய்க்கும் விற்பனையானது.வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த உளுந்தம் பருப்பு வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், மொத்த வியாபாரிகள் தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்து, உளுந்தம் பருப்பை பதுக்கி வருவதால், விலை, மேலும் உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

### டெல்டாவில் பலத்த மழை: மேட்டூர் பாசன நீர் நிறுத்தம்.

மேட்டூர்: டெல்டா மாவட்டங்களில், வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், மேட்டூர் அணை டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பது நிறுத்தப்பட்டது.மேட்டூர் அணையில் இருந்து ஆகஸ்ட், 2 தேதி முதல் டெல்டா பாசனத்துக்கு நீர்திறக்கப்படுகிறது. தொடர் நீர்திறப்பால், ஆக.,10ம் தேதி, 120

அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று முன்தினம், 80.860 அடியாகவும், நீர் இருப்பு, 42.818 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது.டெல்டா மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் பாசனத்துக்கான நீர்தேவை குறைந்துள்ளது. இதனால், வினாடிக்கு, 15,000 கனஅடியாக இருந்த டெல்டா நீர்திறப்பு கடந்த, 19ம் தேதி, 13,000 கனஅடியாகவும், 20ம் தேதி, 3,000 கனஅடியாகவும் குறைக்கப்பட்டது.

டெல்டாவில் தொடர்ந்து மழை நீடிப்பதால் நேற்று காலை மேட்டூர் அணை டெல்டா பாசன நீர் நிறுத்தப்பட்டது. நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் நேற்று முன்தினம், 8,237 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று, 17,106 கனஅடியாக அதிகரித்தது.இதனால், கடந்த, 20ம் தேதி, 80.860 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 82.420 அடியாக உயர்ந்தது.இரு நாளில் நீர்மட்டம் இரண்டு அடியும், நீர் இருப்பு, ஒரு டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. டெல்டா பாசன நீர் நிறுத்தப்பட்டால் மேட்டூர் அணை, சுரங்க மின் நிலையங்கள் மற்றும் கதவணை நிலையங்களில் மின் உற்பத்தி முற்றிலும் நிறுத்தப்பட்டது.

## தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 349 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 349 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருவது, பண்ணையாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 347 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, இரண்டு காசு அதிகரித்து, 349 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது, நுகர்வு அதிகரித்து வருவதால், முட்டை விலையும் உயர்ந்துள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 340, பெங்களூரு, 332, மைசூரு, 337, ஹைதராபாத், 318, மும்பை, 354, விஜயவாடா, 320, கொல்கத்தா, 370, பர்வாலா,

335, டில்லி, 350.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 61 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 67 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### வடமேற்கு பருவமழை துவக்கம்ப.வேலூரில் 48 மி.மீ., மழை

நாமக்கல்: வடமேற்கு பருவமழை துவங்கியதை தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், ப.வேலூரில், அதிக மழை பதிவாகி உள்ளது.தமிழகத்தில், வடமேற்கு பருவமழை பொழியத் துவங்கி உள்ளது. அதனால், கடந்த சில நாட்களாக, மாநிலம் முழுவதும் பரவலாக கனமழை பெய்து வருகிறது.நாமக்கல் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக இடி, மின்னலுடன் கனமழை பெய்து வருகிறது. அதனால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மாவட்டத்தில், ப.வேலூர், மோகனூர் ஆகிய பகுதிகளில், அதிக அளவு மழை பொழிந்துள்ளது.நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, நாமக்கல்லில், ஒரு மி.மீ., பரமத்தியில், 48 மி.மீ., சேந்தமங்கலத்தில், 12 மி.மீ., திருச்செங்கோட்டில், 1.3 மி.மீ., மங்களபுரத்தில், இரண்டு மி.மீ., மோகனூரில், 29 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. நேற்றும் மாவட்டத்தில் சில இடங்களில் மழை பொழிந்தது.

### மழை மீது விவசாயிகள் நம்பிக்கை : நிலத்தடி நீர் மட்டம் உயர்வு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக இந்தாண்டு வடகிழக்கு பருவமழைø மீது விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் மட்டமும் சற்று உயர்ந்துள்ளதால், கிணற்று பாசன விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில ஆண்டாக தென்மேற்கு பருவமழை ஏமாற்றி வருகிறது. வடகிழக்கு பருவமழை பொறுத்த வரையில் ஓரளவுக்கு விவசாயிகளுக்கு கை கொடுத்த போதும், விவசாய தேவைக்கு ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழையை அடிப்டையாக கொண்டு

நீர் ஆதாரங்களில் நீர் சேமிப்பு இருக்கும்.கடந்த சில ஆண்டாய் ஏமாற்றி வரும் தென்மேற்கு பருவமழை காரணமாக மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்களில் வடகிழக்கு பருவமழை காலங்களில், 50 முதல், 60 சதவீதம் மட்டுமே நீர் சேமிக்கும் நிலை ஏற்பட்டது. இதனால், கடந்த சில ஆண்டாய் விவசாய பணிகள் குறிப்பிட்டு சொல்லும்படியாக அமையவில்லை.இந்தாண்டும் தென்மேற்கு பருவமழை ஏமாற்றிய நிலையில், நீர் ஆதாரங்களில் நீர் சேமிப்பு கேள்விக்குறியாகி நிலத்தடி நீர் மட்டம் படு குழிக்கு சென்றது. தற்போது, வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில், தமிழகம் முழுவதும் இந்தாண்டு கூடுதல் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக வங்க கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு காரணமாக தர்மபுரி மாவட்டத்தில் பரவலான மழை பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக விவசாய பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளது. நெல் நடவு பணிகள் முடிக்கப்பட்டு, சில பகுதிகளில் மருந்து, உரங்கள் இடும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மழை காரணமாக நீர் ஆதாரங்கள் அனைத்திலும் நீர் சேமிப்பு அதிகரித்துள்ளது. அந்தந்த பகுதியில் உள்ள பஞ்சயத்து ஏரிகளில் உள்ளூரில் பெய்த மழைக்கு நீர் சேமிப்பு தொடர்ந்து வருகிறது. இதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டமும் சற்று உயர்ந்துள்ளது.பல இடங்களில் இரண்டு அடி முதல் மூன்று அடி வரையில் தண்ணீர் இருந்த கிணறுகளில் தற்போது, 20 அடி வரையில் தண்ணீர் அதிரித்துள்ளது. நிலத்தடி நீர் மட்டம் உயர்வை தொடர்ந்து இறவை பாசன பகுதி விவசாயிகளும் தங்கள் நிலங்களை தயார் செய்து, காய்கறி மற்றும் மலர் சாகுபடி செய்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.இந்தாண்டு வடகிழக்கு பருவமழை ஆரம்பத்தில் களை கட்டுவதால், விவசாயிகளுக்கு நம்பிக்கை கொடுத்துள்ளது. மாவட்டம் முழுவதும் டிசம்பர் வரையில் மழை இருந்தால், நீர் ஆதாரங்கள் கடந்தாண்டை விட கூடுதலாக நீர் சேமிக்க முடியும் என விவசாயிகள் நம்பிக்கை அடைந்துள்ளனர்.

விவசாய பணிகள் சுறுசுறுப்படைந்துள்ள நிலையில், வேலை வாய்ப்பு இல்லாமல் வெளி மாநிலங்களுக்கு வேலை வாய்ப்புக்கு இடம் பெயர்ந்த விவசாயிகள்,

விவசாய கூலி தொழிலாளர்கள் மீண்டும் தீபாவளியையொட்டி ஊர்களுக்கு திரும்ப துவங்கியுள்ளனர்.தற்போதைய மழை விவசாய பணிகளுக்கு நம்பிக்கை கொடுத்திருப்பதால், வரும் நான்கு மாதங்களுக்கு விவசாய பணிகளுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்பதால், கூலி தொழிலாளர்களும் உள்ளூர் பணிகளுக்கு செல்ல துவங்கியுள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.10.2013**

**செய்யூர் அனல்மின் திட்டத்திற்கு விவசாய நிலங்களை தர முடியாது**



சென்னை : செய்யூர் அனல்மின் நிலைய திட்டப்பணிகளுக்கு விளைநிலங்களை தரமுடியாது என்று அப்பகுதி கிராம பொதுமக்கள் கூறினர். சமூக சுற்றுச்சூழல் கண்காணிப்பு குழு ஆலோசகர் நித்தியானந்தம் ஜெயராமன், கெங்கதேவன், குப்பம் கிராம நல முன்னேற்ற சங்க தலைவர் ஆர்.மாரிமுத்து, செயலாளர் வேலாயுதம், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் பாண்டியன், மீனவர் அமைப்பைச் சேர்ந்த எம்.மாரிமுத்து ஆகியோர் சென்னையில் நேற்று அளித்த பேட்டி:

செய்யூரில் 4 ஆயிரம் மெகாவாட் திறனுள்ள அனல் மின் உற்பத்தி திட்டத்திற்கு நிலங்களை கையகப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் மறைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக திட்டத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பட இருக்கும் துறைமுகம் மற்றும் அனல் மின் நிலையம் ஆகியவற்றுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட முறையில் மோசடி நடந்துள்ளது என்று குற்றச்சாட்டுகள் எழும்பி வருகிறது.

துறைமுகத்தில் இருந்து மின் நிலையத்திற்கு நிலக்கரியை சுமந்து செல்லும் கன்வேயர் பெல்ட் திட்டமிடப்பட்டுள்ள நிலத்தின் உரிமையாளர்களும்,

உப்பங்கழிகளில் மீன்பிடிக்கும் மக்களும் தங்கள் நிலங்களைவிட்டு தர மறுத்துள்ளனர். இந்த திட்டத்தால் 6 பஞ்சாயத்துகளும், ஒரு பேரூராட்சியில் வசிக்கும் 54 ஆயிரம் பேரும், 2 லட்சம் கால்நடைகளும் பாதிக்கப்படுகின்றன.

இந்த திட்டம் அந்த பகுதியில் உள்ள செறிவான நீர் ஆதாரங்களை பாதிப்பதுடன், தங்கள் வாழ்வாதாரத்தையும் சிதைக்கும் என்பதால் இந்த திட்டத்திற்கு விளை நிலங்களை தரமுடியாது. இந்த திட்டப்பணியின் இடத்தில், நீர் நிலைகளும் உப்பங்கழிகளும் 100 ஏக்கருக்கு பரந்துள்ளன. எனவே திட்ட முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு முன்பாக திட்டப்பணி யின் மீதுள்ள குற்றச் சாட்டுகளையும், அபாயங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும். திட்டம் நிறைவேற்றப்பட உள்ள இடத்தை முதலீட்டாளர்களை அழைத்து வந்து காண்பிக்கவும் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

எக்ஸ்ட்ரா தகவல்

தமிழகத்தில் 16,57,676 ஹெக்டேர் நஞ்சை நிலங்கள், 67,80,080 ஹெக்டேர் புஞ்சை நிலங்கள் உள்ளன.

**விலை உயர்வை கட்டுப்படுத்த வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை?**



புதுடெல்லி : தலைநகர் டெல்லி உள்பட நாடு முழுவதும் வெங்காயம் விலை மீண்டும் கிடுகிடுவென உயரத் தொடங்கியுள்ளது. கிலோ ரூ.80 முதல் 90 வரை

விற்கப்படுகிறது. இதனால், விலை உயர்வை கட்டுப்படுத்தும் முயற்சியாக வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை விதிப்பது குறித்து மத்திய அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது.

டெல்லி மட்டுமல்ல, நாட்டின் பெரும்பாலான நகரங்களில் சில்லரை மார்க்கெட்டில் வெங்காயம் கிலோ ரூ.60 முதல் 80 வரை விற்கப்படுகிறது. வெங்காயம் அதிகம் விளையும் மகாராஷ்டிரா உள்பட பல மாநிலங்களில் மழையால் காரீப் பருவ சாகுபடியில் வெங்காயம் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால், வரத்து குறைந்தது. இப்போது உள்ள சூழ்நிலையில்,  விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்றால், ஏற்றுமதி வெங்காயத்திற்கான குறைந்தபட்ச விலையை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு இல்லை என்பதால், ஏற்றுமதிக்கு தடை விதிப்பதைத் தவிர வேறுவழியில்லை.

எனவே தடை விதிப்பது குறித்து அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது என்று அரசு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த 3 மாதங்களாக வெங்காயம் விலை உயர்வு அரசுக்கு பெரும் பிரச்னையாக உள்ளது. விலைவாசியை கட்டுப்படுத்த பல நடவடிக்கைகள் எடுத்தபோதும் பயன் ஏதும் இல்லாத நிலையே நீடிக்கிறது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலை ஒரு டன் 650 டாலர் (சுமார் ரூ.39,975) என்ற நிலையில் இருந்தது. செப்டம்பரில் இது ஒரு டன் 900 டாலராக (சுமார் ரூ.55,350) உயர்த்தப்பட்டது.

வெங்காயம் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால், ஏற்றுமதி 28 சதவீதம் குறைந்து இந்த நிதியாண்டில் முதல் 6 மாதங்களில் மொத்தம் 7,16,246 டன்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் ஒரு மாதத்திற்கு மொத்த தேவை 9 முதல் 10 லட்சம் டன் வெங்காயம் தேவை. ஆனால், இதில் 50 சதவீதத்திற்கும் குறைவாகத்தான் வரத்து உள்ளது.

மாநில அரசுகளுக்கு அறிவுரை

நாடு முழுவதும் வெங்காயம் விலை உயர்வுக்கு காரணம் பதுக்கல்தான். நாட்டில் போதிய அளவுக்கு வெங்காயம் இருப்பு உள்ளது. வெங்காயத்தை பதுக்கி செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தி கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர். பதுக்கல்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வெங்காயம் மக்களுக்கு தாராளமாகக் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெங்காயம் விலை ரூ.70 வரை உயர்வு**



தொடர் மழையாலும், வரத்து குறைவாலும் வெங்காயம் விலை உயர்ந்துள்ளது. மகாராஷ்டிராவை தவிர மற்ற இடங்களில் இருந்து வரும் பெரிய வெங்காயம் மொத்த விலை கடைகளில் 1 கிலோ ரூ.60 வரை விற்பனை செய்யப்படுகின்றது. மகாராஷ்டிராவில் வெங்காயம் ரூ.65 முதல் ரூ.70 வரை விற்கப்படுகின்றது.

மழை காரணமாக தக்காளி விலையும் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. தமிழகத்தில் உடுமலைபேட்டை, கிருஷ்ணகிரி, தேனி உள்ளிட்ட பகுதியில் இருந்தும், ஆந்திராவில் ஒட்டி பள்ளி, பலமனேரி, புங்கலூர் முதலான பகுதியில் இருந்தும், கர்நாடகாவில் சீனிவாசபுரம், கோலார், ஹாசன் முதலான இடங்களில் இருந்து தக்காளி வருகின்றது.  முன்பு தக்காளி 1 கிலோ ரூ. 25 வரை விற்பனை

செய்யப்பட்டது. தற்போது மொத்த விலை கடைகளில் 1 கிலோ தக்காளி ரூ.45-க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

**தொடர் மழையால் தக்காளி கிலோ ரூ.35ஆக உயர்வு**

மதுரை, : தொடர்ந்து மழை பெய்து வருவதால் மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.35ஆக உயர்ந்துள்ளது.

மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ, ரூபாயில்): நாட்டு தக்காளி 35, கத்தரிக்காய் 25, வெண்டைக்காய் 10, பல்லாரி 60, சின்ன வெங்காயம் 70, உருளைக்கிழங்கு 30, சேப்பங்கிழங்கு 45, கேரட் 30, பீட்ரூட் 20, பட்டர்பீன்ஸ் 80, சோயாபீன்ஸ் 60, பச்சை பட்டாணி 120, முருங்கை பீன்ஸ் 35, நூக்கல் 20, முள்ளங்கி 15, அவரை 30, மிளகாய் 20, சுரைக்காய் 10, சவ்சவ் 15, சீனி அவரைக்காய் 15, வெள்ளைபூசணி 15, சர்க்கரை பூசணி 10, கருவேப்பிலை 30.

கொத்தமல்லி 30, புதினா 15, காலிபிளவர் 20, பீர்க்கங்காய் 30, முட்டைக்கோஸ் 15, புடலங்காய் 20, பெரிய பாகற்காய் 30, இஞ்சி 80, பச்சை மொச்சை 40, கீரை வகைகள் 15. காய்கறிகளின் விலை குறித்து மொத்த விய £பாரி சேதுபதி கூறுகையில் ‘தற்போது தொடர்ந்து மழை பெய்து வருவதால் தக்காளி விளைச்சல் குறைந்துள்ளது. அதனால் கடந்த வாரத்தில் கிலோ ரூ.10க்கு விற்கப்பட்டது, தற்போது கிலோ ரூ.35ஆக உயர்ந்துள்ளது என்றார்.

**வறட்சியை தாங்க விதை நேர்த்தி செய்வது அவசியம் நெல் விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி அறிவுரை**

பரமக்குடி, : வறட்சி யை தாங்க விதைப்பதற்கு விதை நேர்த்தி செய்வது அவசியம் என வேளாண் மை துணை இயக்குநர் உது மான் முகைதீன் கூறினார்.

பரமக்குடி மற்றும் சுற் றுப்புற கிராமங்களில் விவசாயிகள் நெல் சாகுபடி பணிகளை துவக்கியுள்ள னர். நெல் பயிர்கள் வறட்சி யை தாங்குவதற்கும், நோய் தாக்குதலை

தவிர்க்கவும் விதைக்கும் முன்னர் விதை நேர்த்தி செய்வது அவசியம் என வேளாண்மை துணை இயக்குநர் உதுமான் முகை தீன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் கூறியதாவது:
விதை நேர்த்தி செய்வதில் பல வகையான உத்திகள் உள்ளன. பொட்டாஷ் கரை சல் விதை நேர்த்தி: மானா வாரி சாகுபடியில் 1 சதம் பொட்டாஷ் கரைசல் கொ ண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதனால் பயிரு க்கு வறட்சியை தாங்கும் தன்மை அதிகரிக்கும். ஒரு ஏக்கருக்கு 30 கிலோ நெல் விதை தேவை. இதை 30 லிட்டர் தண்ணீருடன் 300 கி பொட்டாஷ் உரத்துடன் கலந்து தயார் செய்யப்பட்ட கரைசலில் 20 மணி நேரம் ஊற வைக்க வேண் டும். பின்னர் தண்ணீரை வடித்து விதைகளை நிழலில் உலர்த்தி, முந்தைய காய்ச் சல் பதம் வரை காய வைக்க வேண்டும். இந்த விதைகளை உடனடியாகவோ அல்லது ஒரு மாதம் வரை வைத்தோ விதைப்பு செய்ய லாம்.
பூஞ்சாள விதை நேர்த்தி: விதை மற்றும் மண் மூலம் பரவிடும் நோய்க¬ளை வராமல் தடுக்க பூஞ்சாள விதை நேர்த்தி செய்யப்படுகிறது. எல்லா வகை பயிர்களுக்கும் இம்முறையை கையாளலாம்.
கார்பன்டசிம் ரசாயன மருந்து என்றால், ஒரு கிலோ விதைக்கு 2 கி என்ற அளவிலும், சூடோ மோ னாஸ் புளோரசன்ஸ் பாக் டீரிய கலவை என்றால், ஒரு கிலோ விற்கு 10 கி என்ற அளவிலும் நன்கு கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்க வேண்டும்.
உயிர் உர விதை நேர்த்தி: நெல் விதைக்கு ஒரு ஏக்கரு க்கு தேவையான விதையு டன் அசோஸ்பைரில்லம் 200 கிராம் பாக்கெட்டை ஆறிய வடிகஞ்சியுடன் கலந்து பின் விதையுடன் நன்கு கலக்க வேண்டும். சிறு தானியங்கள் எள் மற் றும் சூரியகாந்தி பயிர்களு க்கு அசோஸ்பைரில்லம், நிலக்கடலை பயிருக்கு ரை சோபியம் பயன்படுத்த வேண்டும்.
பூஞ்சாள விதை நேர்த்தி செய்த 24 மணி நேரம் கழி த்து உயிர் உர விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதையடு த்து 24 மணி நேரத்திற்குள் விதைப்பு செய்திட வேண் டும். இவ்வாறு செய்வதால், காற்றிலுள்ள தழைச்சத்து மண்ணில் நிலை நிறுத்தப்

பட்டு பயிருக்கு கிடைக்கும்.
இதனால் உரச்செலவில் 25 சதவீதம் குறைவதுடன் மகசூல் 10 முதல் 25 சதவீதம் வரை கூடுதலாக கிடைக் கும். ஒரு ஏக்கருக்கு தேவை யான விதையுடன் பாஸ்போபாக்டீரியா பொட்ட லம் ஒன்றினை கலந்து விதைக்கலாம். இதனால் மண்ணில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பயிருக்கு எளி தாக மணிச்சத்து கிடைக் கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ஒரு மணிக்கு ரூ.2 ஆயிரம் நெல் அறுவடை இயந்திரங்களுக்கு கூடுதல் வாடகை வாடி வதங்கும் நெல்லை விவசாயிகள்**

நெல்லை, : நெல்லை மாவட்டத்தில் கார் பருவ நெல் அறுவடை நடந்து வரும் நிலையில் அறுவடை இயந்திரங்களுக்கு மணிக்கு ரூ.2 ஆயிரம் வாடகை கேட்பதால் நெல் விவசாயி கள் வாடி வதங்குகின்றனர்.
நெல்லை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளாக தென் மேற்கு பருவமழை பொய்த்துப் போனது. இதனால் கார் பருவ நெல் சாகுபடி ஏமாற்றம் அளித் தது. 4 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு தான் தென் மேற்கு பருவமழை கைகொடுத்தது.
இதன¢ மூலம் நெல்லை மாவட்டத்தில் 45 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. அம்பாசமுத்த¤ரம், சேரன்மகாதேவி உள்ளிட்ட பகுதிகளில் அறுவடை முடிந்துள்ள நிலையில் நெல்லை, பாளை. பகுதியில் ஒரு சில பகுதிகளில் அறுவடை தொடங்கி நடந்து வருகிறது.
அறுவடை பணிக்காக நெல்லை, சேரன்மகாதேவி, தென்காசியில் வேளாண் பொறியியல் துறையின் கீழ் தலா ஒரு அறுவடை இயந்திரம் மட்டுமே உள்ளது. இதற்கு டயர் வசதியுள்ள இயந்திரங்களுக்கு மணிக்கு ரூ.910ம், செயின் வசதி கொண்ட அறுவடை இயந்திரங்களுக்கு மணிக்கு ரூ.1530ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. நெல்லையை பொறுத்தவரை அறுவடை செய்யப்படும் இடங்களில் தண்ணீர் தேங்கியிருப்பதால் செயின் வசதி கொண்ட இயந்திரங்களே பயன்படுத்தப்பட்டு வருகிறது.
தற்போது மழைக்காலம் தொடங்கி விட்ட நிலையில் அறுவடை வேகமாக நடந்து

வருகிறது. அரசு இயந்திரங் கள் தேவையை பூர்த்தி செய்யாத நிலையில் விவசாயிகள் தனியார் இயந்திரங்களையே நாட வேண்டியுள்ளது. இதற்காகவே தஞ்சாவூர், சேலம், பொன்னேரி ஆகிய பகுதிகளில் இருந்து வந்துள்ள அறுவடை இயந்திரங்கள் நெல்லையில் முகாமிட்டுள்ளன. விவசாயிகளின் சூழ்நிலையை பயன்படுத்தி தனியார் அறுவடை இயந்திரங்கள் மணிக்கு ரூ.2 ஆயிரம் வாடகை வசூலிக்கின்றன. அரசு இயந்திரங்களை விட கூடுதலாக ரூ.500 வாடகை கேட்பதால் விவசாயிகள் செய்வதறியாது திகைக்கின்றனர். ஏற்கெனவே விதை, உரம், கூலி என விவசாயிகள் பெரும் தொகையை செலவழித்து விட்ட நிலையில் அறுவடை இயந்திரங்களுக் கும் கூடுதல் பணம் கேட்பது விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

எனவே வேளாண்மைத் துறையினர் நடவடிக்கை எடுத்து தனியார் அறுவடை இயந்திரங்களுக்கும் அரசு வாடகை நிர்ணயம் செய்ய வேண்டும். இதை வேளாண் மை அதிகாரிகள் கண் காணிக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**இறையூரில் உழவர் பெருவிழா**

திட்டக்குடி, : திட்டக்குடி அருகே இறையூரில் உழவர் பெருவிழா வேளாண்மை துறை மற்றும் ஊராட்சி சார்பில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் செல்வமணி கந்தசாமி தலைமை தாங்கினார்.

ஸ்ரீஅம்பிகா சர்க்கரை ஆலை பொது மேலாளர் கார்முகிலன், கரும்பு உற்பத்தி பிரிவு மேலாளர் சிவநேசன், நல்லூர் ஒன்றிய குழுத்தலைவர் ராஜலட்சுமி ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர் ரத்தினசபாபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குநர் பிரேம்சாந்தி வரவேற்றார்.

திட்டக்குடி தொகுதி தமிழ்அழகன் எம்எல்ஏ

ரூ. 6 லட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கு கலை எடுக்கும் இயந்திரம், டிராக்டர், மற்றும் இயற்கை உரம் வழங்கினார். விழாவில் வேளாண்மை அலுவலர் செல்லப்பன், தோட்ட கலை உதவி இயக்குநர் ஏழுமலை, ஆத்மா குழு திட்ட அலுவலர் முத்து சாமி, உதவி வேளாண்மை அலுவலர் ஆல்வின் உட்பட பலர்

கலந்து கொண்டனர்.
சமம் குழுவினரின் கலை நிகழ்ச்சி கலை குழுத் தலைவர் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற துணைத்தலைவர் மாணிக்கம் நன்றி கூறினார்.
பண்ருட்டி:பண்ருட்டி அருகே செம்மேடு கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் மகாலட்சுமி பார்த்தசாரதி தலைமை தாங்கினார். அட்மா குழுத்தலைவர் ராஜேந்திரன், வேளாண்மை உதவி இயக்குனர் சங்கர், ஒன்றிய கவுன்சிலர் ஜோதிபழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய குழு தலைவர் மாலதி கமலகண்ணன் பருத்தி ஆடை மற்றும் மரக்கன்றுகள் வழங்கினார். வேளாண்மை அலுவலர் சண்முகசுந்தரம், உதவி வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், அக்ரோ கூட்டுறவு சங்க தலைவர் கருணாநிதி இயக்குனர் சந்தானம் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதேபோல் கீழகுப்பம், பல்லவராயநத்தம் ஆகிய கிராமங்களிலும் உழவர் பெருவிழா நடந்தது.

**விவசாய வேலை செய்ய ஆளில்லை இயந்திரத்தில் நடக்குது நெல் நடவு கனமழையால் களமிறங்கிய விவசாயிகள்**

சிவகாசி, : தொடர் மழையால் சிவகாசி பகுதியில் விவசாயப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. விவசாய வேலைக்கு ஆள் பற்றாக்குறை இருப்பதால் இந்தாண்டு முதல் நெல் நடவுப்பணிக்கு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. சிவகாசியைச் சுற்றியுள்ள விவசாய கிராமங்களான நாரணாபுரம், செல்லையநாயக்கன்பட்டி, ஆலமரத்துப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த வாரம் கனமழை கொட்டியது. இதனால், அப்பகுதியில் உள்ள இலந்தைக்குளம் கண்மாய், செங்கமலப்பட்டி புதுக்கண்மாய், திருத்தங்கல் உறிஞ்சிகுளம், செங்குளத்தில் ஓரளவு தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் மகிழ்ச்சியடைந்த இப்பகுதி கிணற்றுப்பாசன, கண்மாய்ப்பாசன விவசாயிகள் நெல் நடவுப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.
சிவகாசி வட்டாரப்பாசன சங்க வேண்டுகோளின் படி, நடவுப்பணிக்கு விவசாயக்கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை இருப்பதால் இந்தாண்டு முதல் இயந்திரம் மூலம் நெல் நடவுப்பணிகள் நடந்து வருகிறது. இதற்கான ஏற்பாடுகளை கலெக்டர் ஹரிகரன் உத்தரவின்பேரில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர்

சுப்பையா, சிவகாசி வேளாண்மை உதவி அலுவலர் பத்மாவதி மற்றும் சிவகாசி வட்டார பாசன விவசாயிகள் சங்கத்தலைவர் திருவேங்கட ராமானுஜம் செய்து வருகின்றனர்.

நாற்றுநடும் இயந்திரம் மூலம் நெல் விதைகள் பாவப்பட்டு, 16வது நாள் இயந்திரம் மூலம் வரிசை நடவு செய்யப்படுகிறது. வரிசை நடவு செய்யப்படுவதால் உரம் செலவழிப்பதில் 50 சதவீதம் மிச்சமாவதுடன் தூர்ப்பிடிப்பு அதிகமாகி விளைச்சல் நன்றாக இருக்கும். சாதாரண நடவுக்கு விதைநெல் ஏக்கருக்கு 30 கிலோ செலவாகும். இந்த நவீன நடவு மூலம் 10 கிலோ விதை நெல் மட்டுமே தேவைப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், வரிசை நடவு செய்யப்படுவதால், நாற்றுகளின் இடைவெளி அதிகமாகி நெல்பயிரில் நோய் மற்றும் பூச்சிகள் தாக்குதல் குறைந்து மகசூல் அதிகம் கிடைக்கும். இயந்திரம் மூலம் வரிசை நடவு செய்யப்படுவதால், சுமார் 13 சதவீதம் விளைச்சலும் அதிகமாக இருக்கும் என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சிவகாசி பகுதிகளில் உள்ள 300 ஹெக்டேர் சாகுபடியில் சுமார் 100 ஹெக்டேர் இயந்திர நெல் நடவுப்பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயி திருவேங்கடராமானுஜம் கூறும்போது, ‘‘விவசாயக்கூலிக்கு ஆட்கள் கிடைக்காத நிலையில் பெரும்பாலான விவசாயிகள் இயந்திர நடவுக்கு மாறி வருகின்றனர். இதனால் வேலைகள் வேகமாக நடப்பதுடன், விளைச்சலும் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதால் பெரும்பாலான விவசாயிகள் இயந்திர நெல் நடவுக்கு மாறி வருகின்றனர்.

வரும் வாரங்களில் வடகிழக்குப் பருவமழை நன்கு பெய்யும் என்று வானிலை நிபுணர்கள் கூறுவதால், இந்தாண்டு கிணற்றுப்பாசனம் மற்றும் கண்மாய்ப்பாசனம் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் நெல் நடவுப்பணிகளில் விறுவிறுப்பாக ஈடுபட்டு வருகின்றனர்,’’ என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.10.2013**

**கோழிகளுக்கு நோய் தடுப்பூசி குறித்த பயிற்சி**

கரூர்,

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக இணை பேராசியர் அகிலா விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்ப தாவது:-

கரூர் மாவட்டம் பண்டு தகாரன்புதூரில் அமைந்து உள்ள கால்நடை பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வருகிற 28-ந் தேதி முதல் டிசம்பர் 2-ந் தேதி வரை ஒரு மாத கோழிகளுக்கு நோய் தடுப்பூசி அளிப்பவர் செயல் திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் பண்ணை முறையில் வளர்க்கப்படும் கறிக்கோழி மற்றும் நாட்டு கோழிகளுக்கான நோய் தடுப்பூசி அளித்தல் குறித்த பயிற்சி நடத்தப்படுவதுடன் கோழிகளுக்கு ஏற்படும் நோய்கள், அதற்கான தடுப் பூசிகள், தடுப்பூசி வகைகள், தடுப்பூசி உபகரணங்கள், நோய் தடுப்பூசி அட்டவணை, தடுப்பூசி அளிக்கும் முறைகள் மற்றும் தடுப்பூசி அளிக்கும் போது கவனிக்க வேண்டியவை குறித்த தலைப்புகளில் கோழி பண்ணைகளுக்கு பயிற்சி யாளர்களை அழைத்து சென்று கள பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.

இந்த பயிற்சி பெறுவதன் மூலம் வர்த்தக ரீதியான கோழி பண்ணைகளில் வேலை பெறும் வாய்ப்பு உள்ளது. எனவே பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் ரூ.2 ஆயிரம் கட்டண தொகை செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

**ஈரோட்டில் அதிகபட்சமாக 24.6 மில்லி மீட்டர் மழைப்பதிவு**

ஈரோடு,

ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. கோபிசெட்டிபாளையம், கவுந்தப்பாடி, புஞ்சைப்புளியம்பட்டி என பல்வேறு இடங்களில் பெய்த பலத்த மழையால் குளங்களில் தண்ணீர் கடல் போல் தேங்கி நிற்கிறது. மேலும் பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றுக்கு தண்ணீர் திறந்து விடப்படுவது இல்லை. இருந்தாலும் பவானி ஆற்றில் செந்நிறத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:–

ஈரோடு – 24.6 மில்லி மீட்டர்.

மொடக்குறிச்சி –17 மில்லி மீட்டர்.

கொடுமுடி – 16.6 மில்லி மீட்டர்.

கோபிசெட்டிபாளையம் – 12.2 மில்லி மீட்டர்.

பெருந்துறை – 13 மில்லி மீட்டர்.

ஓலப்பாளையம் – 11 மில்லி மீட்டர்.

கவுந்தப்பாடி – 10.8 மில்லி மீட்டர்.

கொடிவேரி அணை – 9 மில்லி மீட்டர்.

சிவகிரி – 5 மில்லி மீட்டர்.